Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :254 ஆடி 26ஆம் நாள் திங்கட்கிழமை 10 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## 15,000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள்?

கொழும்பு, ஓக. 10
எதிர்வரும் மாதங்களில் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் என்றும், அவர்கள் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைக

14 >

# சம்பந்தனின் சர்வாதிகாரப் போக்கு மாவை, செல்வம், சித்தர் கொதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் எவருடனும் ஆலோசிக்காமல், கலையரசனுக்கு வழங்குவதற்கு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எடுத்த நடவடிக்கைக்கு எதிராக, தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

14 >







## தேசியப்பட்டியல் விவகாரம் நேற்றிரவு திடீர் திருப்பம்!!

### முன்னைய கடிதத்தை நிறுத்துமாறு மறுகடிதம்!

யாழ்ப்பாணம், ஓக. 10
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியலுக்கு கலையரசனின் பெயரை பிரேரித்து அனுப்பிய கடிதத்தை நிறுத்தக் கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இன்றைய தினம் கடிதம் அனுப்பப்படவுள்ளது.
இந்தத் தகவலை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராஜசிங்கம் நேற்றிரவு தெரிவித்தார்.
கலையரசனை நியமித்து

14 >

## தம்பி முன்னிலையில் பதவியேற்றார் அண்ணன்



கொழும்பு, ஓக. 10
இலங்கையில் இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி வகித்துள்ள மஹிந்த ராஜபக்ச நேற்று பிரதம அமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். அவர் தனது கடமைகளை நாளை செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் ஆரம்பிக்கவுள்ளார்.
1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று இளம் வயதில் நாடாளுமன்றத்துக்கு தெரிவான மஹிந்த ராஜபக்ச அரை நூற்றாண்டுகாலமாக செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டுவரும் நிலையில் 4 ஆவது தடவையாகவும் பிரதமராக பதவியேற்றுள்ளார்.
களனி ரஜமகா விகாரையில்

15 >

## கூட்டமைப்பின் தேசிய பட்டியல் விவகாரம்

### திரைமறைவில் நடந்த 'பரபர 'காய் நகர்த்தல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 10
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனம் மாவை. சோ. சேனாதிராசாவுக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்காக தமிழ் அரசுக் கட்சியில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இரண்டு உறுப்பினர்கள் இணைந்து திரைமறைவில் காய்களை நகர்த்தியமை அம்பலத்துக்கு வந்துள்ளது. அத்துடன் கட்சித் தலைமை

14 >

## பச்சை பொய்!

யாழ்ப்பாணம், ஓக. 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனம், எனது சம்மதத்துடன்தான் அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது என்று கட்சியின் செயலர் கி. துரைராஜசிங்கம் சொல்வது பச்சைப்

16 >

## கலையரசன் நியமனம் எனக்கே தெரியாது

### மாவை. விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அம்பாறை மாவட்ட நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் கலையரசன் தெரிவு செய்யப்பட்டுள்ளமை

13 >

## சுமந்திரனாலேயே கூட்டமைப்பு சரிவு

### மாவட்டக் கிளைக் கூட்டத்தில் பகிரங்கக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 10
நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் காரணமாகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தேர்தலில் பின்னடைவு ஏற்பட்

15 >

## தேசியப் பட்டியலில் மாற்றம் செய்யலாம்

### தேர்தல்கள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஓக. 10
தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு முன்னர், ஒரு கட்சி சார்பில் தேசியப் பட்டியலுக்கு பிரேரித்த ஒருவரது பெயரில் மாற்றங்களைச் செய்ய முடியும்

16 >

## மாவைக்கே தேசியப் பட்டியல் மாவட்டக்கிளை அதிரடி தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 10
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசாவுக்கே வழங்கப்படவேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அத்துடன் எந்தவொரு தரப்புடனும் கலந்தாலோசிக்காது கலையரசனுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டமைக்கும் கண்டனம் தெரிவித்துள்ளது.

16 >

# கூட்டமைப்பின் பின்னடைவுக்கு சுமந்திரன் மட்டுமே காரணம்!!!

## கட்சியின் கொழும்புக் கிளை உபதலைவி குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஓக. 10**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும் பின்னடைவுக்கு கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மட்டும்தான் காரணம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்பு மாவட்ட உப தலைவி மிதுலைச்செல்வி சிறிபத்மநாதன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்படி கருத்தை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளுக்கு சரி அரைவாசி வாக்குகள் வீழ்ச்சியடைந்துள்ளன. வாக்கு வீழ்ச்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனே பொறுப்பாளியாகவேண்டும். ஊடகப் பேச்சாளர் என்ற பதவியை வைத்துக்கொண்டு தான்தோன்றித்தனமான கருத்துக்களை வெளியிடுவதும், அவருடைய செயற்பாடுகளுமே தோல்விக்குக் காரணம். மக்களும் இதனை நன்கு அறிவார்கள்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவை தோற்கடிக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயற்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட வீழ்ச்சி தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை சுமந்திரனின் நடவடிக்கைகள் மற்றும் அவர் வெளியிடும் கருத்துக்கள்தான் பின்னடைவுக்கு காரணம் என்று தெரிவித்திருந்தது.

சுமந்திரனாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமசந்திரன், க.வி.விக்னேஸ்வரன், அனந்தி சசிதரன் போன்றவர்கள் வெளியேறியிருந்தார்கள். தமிழர் தேசங்களில் புதிய கட்சிகள் உருவாகியுள்ளமைக்கும், மக்களின் பிரிவுகளுக்கும் சுமந்திரன்தான் காரணம். ஒருவர் மட்டும் முடிவுகளை எடுப்பதே கட்சிக்குள் பிளவுகள் ஏற்படுவதற்கு காரணம்.

கட்சியின் சகல விடயங்களிலும் தலையிட்டுவிட்டு, இப்போது தோல்வியை மட்டும், தலைவர், செயலாளர் மீது போடுவது பொருத்தமற்றது.

சுமந்திரனை கட்சியிலிருந்து விலக்கினால் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒரு அணியில் சேர்ந்து பயணிக்கும் வாய்ப்பு ஏற்படும் - என்றார். (ஒ.5,20)

## கைக்குண்டு மீட்பு

கிளிநொச்சி, ஓக. 10

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரத்தில் கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பயன்பாட்டிலிருந்த காணியிலிருந்தே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. மக்கள் கைக்குண்டை இனங்கண்டு பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்தனர்.

கிளிநொச்சி நீதிவான் மன்றில் அனுமதி பெற்று கைக்குண்டைச் செயலிழிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ.ஒ,6)

## யானையை பந்தாடிய ரயில்

வவுனியா, ஓக. 10

வவுனியா, கனகராயன் குளப் பகுதியில் ரயிலுடன் மோதி யானை உயிரிழந்துள்ளது. விபத்துக்குள்ளான ரயில் தடம் புரண்டது.

இந்த விபத்து கனகராயன், ஆலங்குளத்தில் நேற்று அதிகாலை நடந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலே விபத்தில் சிக்கியது. ரயிலுடன் மோதிய யானை அந்த இடத்திலேயே உயிரிழந்தது.

விபத்துக்குள்ளான ரயில் தண்டவாளத்தில் இருந்து விலகித் தடம் புரண்டது. பயணிகள் எவருக்கும் விபத்தில் காயம் ஏற்படவில்லை.

விபத்து நடந்த இடத்துக்குச் சென்ற கனகராயன் குளம் பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த விபத்தால் பல மணி நேரத் தாமதத்துக்குப் பின்னர் ரயில் தனது பயணத்தைத் தொடர்ந்தது. (எ.ஒ,6,18,1 10,159)

## ரவிராஜ் சிலையை அலங்கரித்த சாடிகள் அடித்து நொருக்கப்பட்டன

சாவகச்சேரி, ஓக. 10



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் சிலையை அலங்கரித்த பூச்சாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், அவரது சிலைக்கு கடந்த 7ஆம் திகதி போடப்பட்ட கறுப்பு, சிவப்பு மற்றும் மஞ்சள் துணிகளும் அகற்றப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலக முன்றலில் அமைந்துள்ள அமரர் ரவிராஜின் உருவச்சிலையைச் சுற்றி அலங்காரத்துக்காக பூச்சாடிகள் வைக்கப்பட்டிருந்தன. அவை நேற்றுப் பி.ப. 5 மணியளவில் அடித்து உடைத்து நொருக்கப்பட்டுள்ளன.

அவரது உருவச்சிலை யை மூடி சசிகலா ரவிராஜின் ஆதரவாளர்களால் கட்டப்பட்டிருந்த கறுப்பு, சிவப்பு மற்றும் மஞ்சள் துணிகளும் அகற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5,159)

## 700 கிலோ நிறையுடைய மீன் சடலமாக ஒதுங்கியது

மன்னார், ஓக. 10

தலைமன்னார் பிரதான வீதி, ஆதாம் பாலத்துக்கு உட்பட்ட தேசிய வனப் பூங்கா பகுதியில் 3.3 மீற்றர் நீளமும் 700 கிலோ நிறையுடைய மீன் சடலமாக நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.



கடற்படையினர் மீன் கரையொதுங்கியிருந்தமையை அவதானித்து வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கினர்.

அவர்கள் மீனைப் பார்வையிட்டனர். மீனின் ஒரு பகுதி வேட்டைக்காக துண்டாடப்பட்டுள்ளது. நேற்று மதியம் உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இந்தக் மீன் அருகிவரும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த கடற்பன்றி என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ.5,56)

## மாணவி சாவு

தெஹியத்த கண்டி அரலகங்வில பிரதான வீதியின் போகஸ் சந்தியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 7 மாணவிகள் காயமடைந்துள்ளனர். (ஒ.5)

# ஒன்றாக இணையாது விட்டாலும் ஒற்றுமையாகவாவது செயற்படுவோம்

## கஜேந்திரகுமார், விக்னேஸ்வரனுக்கு புளொட் தலைவர் சித்தார்த்தன் அழைப்பு

சுன்னாகம், ஓக.10

தமிழ் மக்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் ஒன்றாக இணையாது விட்டாலும் ஒற்றுமையாகச் செயற்பட முன்வர வேண்டும் என்று புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகளின்படி கோத்தாபய அரசு மிகவும் பலம் அடைந்துள்ளது. தமிழ் மக்கள் தற்போது கடும் நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளனர். இவ்வாறான நிலையில் கஜேந்திரகுமார் அணியும் விக்னேஸ்வரன் அணியும் எம்முடன் ஒன்றாக இணையாது விட்டாலும் பரவாயில்லை தமிழ் மக்கள் நலன் சார்ந்து நாம் அனைவரும் ஒற்றுமையாக மனப்பூர்வமாக செயற்பட வேண்டும். வார்த்தைகளால் மட்டும் அல்லாது மனபூர்வமாக ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

நான் எமது கட்சியுடன் இணையுங்கள் என்று கூறவில்லை. மாறாக மக்கள் நலனுக்காக தற்போதைய சூழ்நிலையில் ஒற்றுமையாக செயற்பட முன்வாருங்கள் என்றே அழைப்பு விடுக்கின்றேன். இது நடைபெற வேண்டும். வெறுமனே மக்களுக்கு நான் ஒற்றுமையாகச் செயற்பட தயாராக இருக்கின்றேன் என்று ஒருவருக்கு ஒருவர் காட்டிக்கொள்ளாமல் உண்மையிலேயே ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டும், என்றார். (ஒ.5,20)

# கோத்தாவின் சகாக்கள் 10பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவு!

கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நேரடி வழிகாட்டலுடன் இயங்கிய 'வியத்மக' அமைப்பிலிருந்து 10 பேர் இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர். அவர்களில் இருவர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவதற்கு மேற்படி அமைப்பு திரைமறைவில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததுடன், அவரின் வெற்றிக்காக நாடு முழுவதிலும் தீவிர பரப்புரைகளில் ஈடுபட்டது.

வியத்மக அமைப்பின் சார்பில் தாமரை மொட்டு சின்னத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட சரத் வீரசேகர 3 லட்சத்து 28 ஆயிரத்து 92 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். இதனால் மூன்று பொதுத்தேர்தல்களில் முதலிடம்பிடித்த விமல் இரண்டாம் இடத்துக்கு பின்தள்ளப்பட்டார்.

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட பேராசிரியர் நாலக கொடஹேவா 3 லட்சத்து 25 ஆயிரத்து 479 விருப்பு வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்றார். இதனால் பிரசன்ன ரணதுங்க இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட நாலக கோட்டேகொட, அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிட்ட பேராசிரியர் சன்ன ஜயசுமன, குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட பேராசிரியர் குணபால ரத்னசேகர, கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட சட்டத்தரணி உதயன கிரிந்திகொட, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட வைத்தியர் உபுல் கலப்பதி, திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட திலக் ராஜபக்ச ஆகியோரும் வெற்றிபெற்றுள்ளனர்.

அதேவேளை, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல ஆகியோருக்கு தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தேசியப்பட்டியலில் இடம் பிடித்துள்ள 7 இற்கும் மேற்பட்டோர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நெருக்கமானவர்கள் என்பதுடன், ஜனாதிபதி தேர்தலின்போது அவரின் வெற்றிக்காக கடுமையாக உழைத்தவர்களாவர். (ஒ.5.44)

# புதிய அமைச்சரவை புதனன்று பதவியேற்பு

கொழும்பு, ஓக. 10

புதிய நாடாளுமன்றத்தின் தேசியப்பட்டியலின் பிரதிநிதிகள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியிடப்பட்டால், அமைச்சரவை அமைச்சர்களின் பதவியேற்பு எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும் என சிறிலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

புதிய அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்வு கண்டி மகுல் மடுவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. புதிய அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையானது மட்டுப்படுத்தப்பட்ட வகையில் அமையப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப் படவுள்ளள என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ.ஒ)



# அண்ணனை வணங்கி 'வைரலான' கோத்தா!

களனி ரஜமஹா விகாரையில் மஹிந்த ராஜபக்ச நேற்றுக் காலை பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் முன்னிலையில் இந்தப் பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது. மஹிந்த பதவியேற்ற பின்னர் தனது அண்ணானான மஹிந்தவின் பாதங்களில் விழுந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆசி பெற்றார். அது சமூக வலைத்தளங்களில் 'வைரல்' ஆகியுள்ளது. இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக கோத்தாபய பதவிவகிக்கின்றார். இவர் முன்னிலையிலேயே பிரதமராக மஹிந்த ராஜபக்ச பதவியேற்றார். மஹிந்த ராஜபக்ச இரண்டாம் நிலை பதவி வகித்தாலும் கோத்தாபயவின் அண்ணன். எனவே, நிகழ்வின் பின்னர் அண்ணாவின் பாதங்களை தொட்டு தம்பி கோத்தாபய ராஜபக்ச ஆசிபெறும் காட்சி இன்றைய இளம் தலைமுறைக்கு சிறந்த பாடம், என்று பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ,ஒ)

# மரண அறிவித்தல்



## தம்பையா சிவபாதம்

(முன்னாள் உரிமையாளர் - றிக்கோ பேக்ஹவுஸ்)

மாசியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வீதி இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவபாதம் (முன்னாள் உரிமையாளர் - றிக்கோ பேக்ஹவுஸ்) நேற்று (09.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - மாசிலாமணி தம்பதியரின் தவப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி - சோதியம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற கனகேஸ்வரியின் ஆசைக் கணவரும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புச் சகோதரனும், தனுஷியா, உஷாநந்தினி, கிருஸ்ணகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், யசிதரன் (உரிமையாளர் - முத்துமாரி ஹாட்வெயார் - இருபாலை, பளை, கலட்டி), அருமை மாமனும், சிவமைந்தன், மதிவாணி, துருபன் ஆகியோரின் செல்லத்தாத்தாவும், காலஞ்சென்ற P. சோமசுந்தரம் (உரிமையாளர் - P. சோமசுந்தரம் அன்கோ), காலஞ்சென்ற பத்மநாதன் (றிக்கோ ஹோட்டல்) மற்றும் விமலநாதன், செல்வநாதன், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் கமலநாதன், கோணேஸ்வரநாதன், புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சபாநாதன், சிவச்சந்திரன் ஆகியோரின் சகலனும், சூரியகுமார், கிரிசாந்தா, நிர்மலா, காலஞ்சென்ற தேவகுமார் மற்றும் தர்மினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூடவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தோற்றம்
27.05.1945

மறைவு
09.08.2020

தகவல்:
யசிதரன் (மருமகன்)
(உரிமையாளர் முத்துமாரி ஹாட்வெயார் - பளை - இருபாலை)
077 656 0112

# இன்றைய நாள்

**மேடம்:** முன்னேற்றம் உண்டாகும் நாள். பணவரவு திருப்தி தரும். மேலதிகாரி ஆதரவுடன் நடந்து கொள்வார். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பெண்களின் பிரச்சினைகள் அகலும்.

**இடபம்:** நண்பர்களால் ஆதாயம் பெறும் நாள். வீட்டில் நிகழ்ச்சிகள் நடக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். நிம்மதி கூடும். கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**மிதுனம்:** தம்பதி இடையே இருந்த மோதல்கள் விலகும். தடைப்பட்ட வேலைகள் விரைந்து முடியும். கலைத்துறையினர் தேவையான பொருள்களை வாங்குவர்.

**கடகம்:** நல்ல மாற்றங்கள் ஏற்படும் நாள். பணவரவு திருப்தி தரும். உறவினர்கள் மதிப்பார்கள். பொருட்களின் சேர்க்கை அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார்..

**சிம்மம்:** வேலையில் இழுபறிறி உண்டாகும் நாள். வியாபாரத்தில் கவனம் தேவை. பிறரை மட்டம் தட்டிப் பேச வேண்டாம். மேலதிகாரிகளை அனுசரித்துப் போகவேண்டும்.

**கன்னி:** என்றைக்கோ செய்த தவறுகள் வெளிவரும் நாள். போட்டிகளில் ஈடுபட வேண்டாம். வாக்குக் கொடுத்த விஷயங்களில் சிக்கல் ஏற்படக்கூடும். பொறுப்புகள் ஏற்பதால் வீண் விவாதங்களில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** கணவரின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி தரும் நாள். தாய்வழி உறவினர்களிடம் பகை வேண்டாம். வழக்குகளில் நிதானப் போக்கு காணப்படும்.

**விருச்சிகம்:** பெண்களின் தைரியம் கூடும் நாள். பணியிடத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். அக்கம் பக்கத்தினருக்கு உதவி செய்வீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**தனுசு:** திட்டமிடாத விஷயங்களில் மனம் செலுத்தும் நாள். இதுவரை இருந்த சோர்வு நீங்கும். மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். உறவினருடன் கசப்பு ஏற்படாமல் கவனமாக இருங்கள்.

**மகரம்:** புதிய விஷயம் கற்கும் நாள். முயற்சியில் பொறுமை தேவை. வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்கள் கிடைப்பர். உறவினருடன் எதிர்பார்த்த அளவு நெருக்கம் இருக்காது.

**கும்பம்:** முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். எதிர்ப்புகள் விலகும். எந்த ஒரு வேலையையும் ஆராய்ந்து செய்வீர்கள். வீண் அலைச்சல் இருக்காது.

**மீனம்:** அரசால் ஆதாயம் பெறும் நாள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். முக்கிய பிரமுகரின் உதவி கிடைக்கும். பெண்களின் விருப்பத்திற்கேற்ப எதுவும் நடக்கும்.

# புதிய உத்வேகத்துடன் சிறந்த அரசியலை முன்னெடுப்பேன்

## ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவிப்பு

கொழும்பு. ஓக.10

புதிய உத்வேகத்துடனும் புதிய எதிர்பார்ப்புடனும் மிகச் சிறந்த அரசியலை முன்னெடுத்துச் செல்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தேர்தல் காலங்களில் முதலில் கட்சியை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்ப டும். பின்னர் கட்சிகளுக்குள்ளேயே விருப்பு வாக்குகளுக்கு போட்டி ஏற்படும். இந்நிலைமை சகல கட்சிகளுக்குள்ளும் இருக்கும் நிலையாகும். இது விருப்பு வாக்கு முறையில் உள்ள குறைபாடாகும். இதனால் ஏற்றத்தாழ்வுகள், விருப்பு வெறுப்புகள் ஏற்படும். எனவே போட்டிகள் வருமென்பது இயல்பானது.

தேர்தலில் நானும் மனோ கணேசனும் இணைந்து பயணிக்கவே நினைத்திருந்தோம். பின்னர் தனித்தனியே செல்லும்போது வாக்குகளை அதிகம் பெற்றுக்கொள்ள முடியுமென மனோ கணேசன் கூறியதால் தனியே பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனவே தனிப்பயணம் எங்களுக்கிடையிலான பிரச்சினை என்று கூறமுடி யாது. இன்று என்னோடு பலர் இணைந்து பயணிக்கத் தயாராக இருக்கின்றார்கள். அது தனிப்பட்ட பயணமா அல்லது அங்கம் வகிக்கும் கட்சியுடனான பயணமா என்பது தொடர்பில் சிந்திக்க இன்னமும் காலம் தேவை. மனோ கணேசனுடன் இவ்விடயம் தொடர்பாக தெளிவாக பேசத் தீர்மானித்திருக்கின்றேன். அதன் பின்னரே அது தொடர்பில் முடிவுகள் எடுக்கப்படும். ஆனால் நிச்சயமாக என்னுடைய அரசியல் பய ணம் காத்திரமானதாக அமையும். புதிய உத்வேகத்துடன் புதிய எதிர்பார்ப்புடன் நல்லதொரு அர சியலை முன்னெடுப்பேன். என்னுடைய அரசியலில் பிரதேசவாதம் இருக்காது. எனது அரசியல் பயணம் கொழும்பை தலைமையாகக் கொண்டு நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும்- என்றார். (ரி3)

## ரூபா 450 பில்லியன் பெறுமதியான

# நாணயத்தாள்களை அச்சிட்டது மத்திய வங்கி




கொழும்பு, ஓக.10

இலங்கை மத்திய வங்கி கடந்த பெப்ரவரி கடைசி வாரம்வரை 450 பில்லியன் ரூபாக்கும் அதிகமான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளது. இதில் 164.9 பில்லியன் ரூபா மார்சிலும் 92.5 பில்லியன் ரூபா ஏப்ரலிலும் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளன.

எனினும் இந்தச் செயற்பாடு விரைவான அபிவிருத்தியையோ அல்லது பணவீக்கத்தையோ ஏற்படுத்தவில்லை என்று மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழமையாக இலங்கை மத்திய வங்கி, தம்மிடம் உள்ள நாணய ஒதுக்கத்தின் அடிப்படையிலேயே நாணயத் தாள்களை அச்சிடும். எனினும் இந்த ஒதுக்கம் கடந்த ஆண்டு ஜூலை கடைசி வாரத்தில் 996.5பில்லியன் ரூபாவில் இருந்து 868 பில்லியன்க ளாக குறைந்தது.

இது ஒரு வருடத்துக்கு முன்னுள்ள ஒதுக்கமான 874.5 பில்லியன் ரூபாவை விடக் குறைவானதாகும்.

வணிக வங்கிகள் மத்திய வங்கியில் வைப்பிலிட்ட தொகையில் குறைவு ஏற்பட்டமை காரணமாகவே மத்திய வங்கியின் நாணய ஒதுக்கம் குறைந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## பிரியாவிடை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.10

உடுவில் பிரதேச செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றி, கொழும்பு மனித வள வேலை வாய்ப்புத் திணைக்களத்துக்குப் பிரதம கணக்காளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் அரசரட்ணம் மோகன்ராஜீக்கு உடுவில் பிரதேச உத்தியோகத்தர்களால் பிரியாவிடை நிகழ்வு பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் உதவிப் பிரதேச செயலர், திட்டமிடல் பணிப்பாளர். கிராம அலுவலர்கள், நிர்வாக அலுவலர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். கணக்காளர் சேவை தரம் 1 இற்கு கடந்த 5 வருடத்திற்கு முன்னர் பதவியுயர்வு பெற்ற மோகன்ராஜ் கணக்காளர் சேவையில் 20 வருடங்கள் பணியாற்றி, தற்போது மனிதவள வேலை வாய்ப்பு பணியகத்திற்கு பதவியுயர்வு பெற்றுச்செல்வதுடன் எதிர்வரும் 12ம் திகதி புதன்கிழமை தனது கடமைகளைப் பெறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3-39)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியாவில்** பத்தினியார் மகிழங்குளம் கிராமம், கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, ஆண்டியப்புளியங்குளம், வாரிக்குட்டியூர் 4ம் வட்டாரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## மோட்டார் சைக்கிள் திருட்டு

வவுனியா, ஓக.10

வவுனியா கற்குளி பகுதியில் வைத்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை பகல்வேளையில் வீடொன்றிற்கு முன்னால் வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த என்.பி.ஏச்.ஐ.16704 இலக்க மோட்டார் சைக்கிள் ஒன்றே இனந்தெரியாத நபர்களால் திருடப்பட் டுள்ளது. (ரி3-110)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழ்த் தேசியத்தின் குரலை வலுப்படுத்துங்கள்

“தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகளுடன் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வடக்கு – கிழக்கில் உள்ள பெரும்பாலான தமிழ் மக்கள் நிராகரித்துள்ளனர். கடந்த காலத்தில் கூட்டமைப்பு அரசிடம் வலியுறுத்திய விடயங்கள் அனைத்தும் தமிழ் மக்களுடைய அபிலாசைகள் அல்ல என்பதும், அவர்களுடைய சொந்தக் கருத்துக்கள்தான் என்பதும் தற்போது வெளிப்படையாகியுள்ளது "இவ்வாறு தெரிவித்துள்ளார் ராஜபக்சக்களின் தீவிர விசுவாசியான விமல் வீரவன்ச.

தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூட்டமைப்பினர் இனிக்கூற முடியாது என்று ஜி.எல்.பீரிஸ் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில், அவரின் கருத்துடன் மிக நெருங்கித் தொடர்புடையது விமல் வீரவன்சவின் கருத்து.

வடக்கு – கிழக்கில் கூட்டமைப்பு பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பது வெளிப்படையானதுதான். அதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் கூட்டமைப்பின் கொள்கைகள் தோற்கடிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியத்தின் பால் தமிழர்களுக்கு இருக்கும் பற்றுறுதி மாறவில்லை. ஏனெனில் தேசியக் கட்சியான சுதந்திரக்கட்சிக்கும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் கிடைத்த ஆசனங்கள் நீங்கலாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஏனைய மக்கள் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கொள்கையுடன் செயற்படுகின்ற தரப்பினர்தான்.

வாக்குகளின் அடிப்படையிலும், ஆசனங்களின் எண்ணிக்கை ரீதியாகவும் நோக்கினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் வலுவிழந்துவிட்டது தான். ஆனால் தமிழ்த் தேசியக் கொள்கைகள் நாடாளுமன்றத்தில் வலுவிழந்து விட்டன என்ற கொக்கரிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று தரப்பினரும் இணைந்து நாடாளுமன்றத்தில் ஒரே குரலாக ஒலிக்கும் பட்சத்தில் விமல், ஜி.எல்.பீரிஸ் போன்ற இனவாத முகவர்களின் கொட்டத்தை நிச்சயம் அடக்க முடியும்.

ஒரு குடும்பத்துக்குள் வாழும் அண்ணன், தம்பிக்கு இடையில் சண்டைகள் கருத்து முரண்பாடுகள் வருவது இயல்பு. அவர்கள் தமக்குள் அடிபட்டுக்கொண்டாலும் தமது குடும்பத்துக்கும் அதன் இருப்புக்கும் ஏதேனும் பிரச்சினையென்றால், தமது உள்வீட்டுச் சண்டைகளைக் கடாசி எறிந்துவிட்டு பிரச்சினைகளை எதிர்கொள்ள ஓரணியில் ஒன்றுதிரண்டு விடுவார்கள். அதே நிலையைத் தான் இந்த மூன்று கட்சிகளும் இங்கே பின்பற்ற வேண்டியிருக்கின்றது.

தமிழ்த் தேசியம் என்ற குடும்பத்துக்குள் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம், பிரச்சினைகள் இருக்கலாம், பிரிவினைகள் இருக்கலாம். ஆனால் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியத்தை இரையாக்கும் நோக்கில் இலக்கு வைத்து பேரினவாதக் கட்சிகள் செயற்படுகின்றபோது இந்த மூன்று கட்சிகளும் தமக்குள் ஒன்றுபட்டு எதிரியைச் சிதறடிக்க வேண்டும். கூட்டமைப்புத்தானே விமர்சிக்கப்படுகின்றது என்று ஏனைய இரு கட்சிகளும் சித்தன் போக்கு சிவன் போக்கு மாதிரி இருப்பதும் நியாயமாகாது. அதேபோல் முன்னணியும், கூட்டணியும்தானே விமர்சிக்கப்படுகின்றன என்று கூட்டமைப்பும் மௌனம் காக்கக் கூடாது. மூன்று கட்சிகளில் ஏதேனும் ஒன்றை இலக்கு வைத்து பேரினவாதிகள் தாக்கினால், ஏனைய இரு கட்சிகளும் சேர்ந்து நின்று அதைத் தடுக்க குரல் கொடுக்க வேண்டும். அதேபோன்று தமிழ் மக்களின் உரிமைக்கான விடயங்களையும், மூன்று கட்சிகளும் தமக்கிடையேயான பேதங்களை மறந்து இனத்தின் நன்மையை முன்னிலைப்படுத்தி செயற்படுவதே ஆரோக்கியமான தமிழ்த் தேசிய அரசியலுக்கு வழிவகுக்கும்.


கூட்டமைப்புத் தவிர்ந்த மாற்றுக் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் ஆணையிட்டாலும் அவர்களின் ஆணை தமிழ்த் தேசியத்தை விட்டு நீங்கவில்லை என்பது பேரினவாதிகளுக்கு உறைக்கட்டும். தமிழ்த் தேசியத்தின் இருப்பை நிலைநிறுத்தும் வகையில், சுயநலங்களை விடுத்து தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் அவா.

### நாடாளுமன்றில்

# புதிய உறுப்பினர்களுக்கான ஆசனங்கள் ஒழுங்குபடுத்தப்படும்

கொழும்பு, ஓக.10

சுகாதாரப் பாதுகாப்பு முறைமைகளுக்கு அமைவாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனங்களை ஒதுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் நீல் இத்தவல தெரிவித்துள்ளார்.



தனிநபர் இடைவெளியைப் பேணி, அதிகளவான சுகாதாரப் பாதுகாப்புடன் அவையில் செயற்படுவதற்குத் தேவையான வசதிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தமுறை நாடாளுமன்றத்தில் ஆசனங்களை ஒதுக்கும்போது, எதிர்க்கட்சியின் பின்வரிசையில் உள்ள சுமார் 20 ஆசனங்களை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்க வேண்டியுள்ளது.

அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ளதால் ஆளும் கட்சிக்கான ஆசனங்கள் போதாமையே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

## உலக பழங்குடிகள் தினம் ஒத்திவைப்பு

கொழும்பு,ஓக.10

இலங்கையில் கடந்த வாரம் தேர்தல் இடம்பெற்றதன் காரணமாக உலக பழங்குடிகள் தினத்தை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக பழங்குடி தலைவர் ஊருவரிகே வன்னிலெத்தன் தெரிவித்துள்ளார்.

உலக பழங்குடிகள் தினத்தை ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி கடைப்பிடிக்க வேண்டுமென, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 1994 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முன்மொழியப்பட்டது. அது 2007 செப்ரெம்பர் 13ஆம் திகதியன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தொல்பழங்குடிகளான குறிஞ்சி நிலத்தின் குறவர்களின் உரிமைகளை ஊக்குவிக்கவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இது பழங்குடி குறவர் மக்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற உலகப் பிரச்சினைகள் தொடர்பாக எடுக்கும் நல்லெண்ண முடிவுகளுக்கு அங்கீகாரமாகப் பார்க்கப்படுகிறது.

தற்போது தேர்தலால் பிற்போடப்பட்ட இந்தத் தினத்தை சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகக் கடைப்பிடிக்குமாறு பழங்குடிகள் தலைவர் கேட்டுள்ளார். (க)

## மூவர் குணமடைவு

கொழும்பு,ஓக.10

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 3 பேர் பூரண குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வெளியேறியுள்ளனர் என்று தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 576ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால் மொத்த பாதிப்பு இரண்டாயிரத்து 841ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் வைரஸ் தொற்றாளர்கள் 251பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இலங்கையில் இதுவரையில் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## அகற்றப்பட்டது காவல் அரண்

கிளிநொச்சி, ஓக. 10

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தருமபுரம் நெத்தலியாறு பாலத்துக்கு அருகில் உள்ள இராணுவக் காவலரண் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டுள்ளது.

தருமபுரம் நெத்தலியாறு சித்திவிநாயகர் கோவில் மற்றும் நெத்தலியாறு முத்துமாரியம்மன் ஆலயம் என்பவை குறித்த பாலத்துக்கு அண்மையில் அமைந்துள்ளன.

அங்கு திருவிழாகள் நடைபெறவுள்ளன. அதனால் காவலரணை அகற்றுமாறு கோவில் நிர்வாகத்தினர் இராணுவ பொறுப்பதிகாரியிடம் கடிதம் மூலமாக கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த நிலையில் விசுவமடு இராணுவ மேஜர் பி.ஆர். பஸ்நாயக்க கோவிலில் நேற்றுமுன்தினம் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார். தொடர்ந்து காவலரணையும் அகற்றினார். (கு-113)

## இறுவட்டு வெளியீடும் வளவாளர் கௌரவிப்பும்

வடமராட்சி தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கை நிலையத்தால் மாணவருக்காகத் தயாரிக்கப்பட்ட இறுவட்டு வெளியீடும், வளவாளர் கௌரவிப்பும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு வடமராட்சி கல்வி வலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் சி.உதயகுமார் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி, கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர். (க)

# மீண்டும் சர்வதேச சேவைகளில் மத்தல விமான நிலையம்

கொழும்பு, ஓக.10

**மத்தல சர்வதேச விமான நிலையம் இன்று முதல் சர்வதேச விமான சேவைகளை முன்னெடுக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதன்படி, எமிரேட்ஸ் விமானம் இன்று மத்தல விமான நிலையத்திற்கு வருகை தந்து, அங்கிருந்து அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சரக்கு ஏற்றி இறக்கும் சேவைகளை முன்னெடுக்கவுள்ளது.




2013 மார்ச் 18 இல் திறக்கப் பட்ட இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தல ராஜபக்ச விமான நிலையம், நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் 2015 செப்ரெம்பர் 2 இல் மூடப்பட்டு, கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் விமான நிலைய வளாகக் கட்டடத்தில் நெல் சேமிக்கப்பட்டது.

கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாக செயலற்ற நிலையில் இருந்து வந்த மத்தல சர்வதேச விமான நிலையம், கொரோனாத் தொற்று காரணமாக மீண்டும் செயற்படத் தொடங்கியது.

இவ்வாண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மட்டும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் வெளிநாட்டு விமானங்கள் உட்பட 70 விமானங்கள் மத்தல விமான நிலையம் ஊடாக சேவைகளை மேற்கொண்டன. இவ் விமான நிலையம் 2,500க்கும் மேற்பட்ட பயணிகளுக்கு சேவையை வழங்கியுள்ளது. இந்நிலையிலேயே, மத்தல சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நாளை எமிரேட்ஸ் விமானம் மூலம் 28 டன் சரக்கு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## தேர்தலுக்குப் பின்னர் வன்முறை பதிவாகவில்லை

கொழும்பு, ஓக.10

பொதுத்தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், தேர்தலின் பின்னரான காலப்பகுதியில் எந்த வன்முறை சம்பவங்களும் பதிவாகவில்லை என தேர்தல்கள் விவகாரத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இக்காலப்பகுதியில் 5 சிறு முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளன. அவை தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் பொதுத்தேர்தலின் பின்னரான காலப்பகுதி சுமுக நிலையில் நகர்கின்றது. வாக்களிப்பு தினத்தன்றும், வாக்களிப்புத் தினத்துக்கு முன்னரும் பதிவான தேர்தல்கள் வன்முறை மற்றும் சட்ட மீறல்கள் குறித்த மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அந்தந்த பொலிஸ் வலயங்கள் ஊடாக இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் குறித்த சம்பவங்களை மையப்படுத்தி ஆலோ சனை கோர தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார் இதேவேளை தேர்தலுக்கு முன்னர், இடம்பெற்ற சட்ட மீறல்கள் தொடர்பில் 480 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் 561 பேர் அது தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தனர். அத்துடன் 165 வாகனங்கள் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



## திருமலையில் வாசிகசாலைகள் திறந்து வைப்பு

திருகோணமலை, ஓக.10

வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் மத்தியில் விரிவுபடுத்தும் நோக்குடன் புல்மோட்டை ரகுமான் நகர் மற்றும் புல்மோட்டை அரபாத் நகர் பகுதிகளில், இரண்டு வாசிகசாலைகள் நேற்றுமுன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டன. குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக்னால் இந்த வாசிகசாலைகள் திறந்து வைக்கப்பட்டன. (ரி2)

### ரூபா ஒரு கோடி பெறுமதியான

## இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட மஞ்சள், ஏலக்காய் மீட்பு

கொழும்பு, ஓக.10

சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட மஞ்சள் மற்றும் ஏலக்காய் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சள் மற்றும் ஏலக்காயின் மொத்தப் பெறுமதி ஏறக்குறைய ஒரு கோடி ரூபா எனவும், இந்தியாவில் இருந்து மீன்பிடிப் படகு மூலமாக இப் பொருள்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனவும் இராணுவ புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீன்பிடிப் படகின் உரிமையாளர் மற்றும் அதில் பயணித்த இரண்டு மீனவர்களைக் கைது செய்துள்ள இராணுவத்தினர், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள கைது செய்யப்பட்ட நபர்களை கல்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)




### சுற்றுலாவிகளுக்காக மீண்டும் சேவையில்

## கட்டுநாயக்க

கொழும்பு, ஓக.10

சுற்றுலாப் பயணிகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையம் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

புதிய அமைச்சரவை நியமனத்தின் பின்னரே இந்த விமான நிலையம் மீண்டும் திறக்கப்படவுள்ளது என விமான சேவை நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ் சூரியராய்ச்சி தெரிவித்துள்ளார்.

விமான நிலையம் திறக்கப்பட்டா லும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை வழமை போன்று முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் தனிமைப்படுத்தல் காலம் தொடர்பில், சுகாதா ரப் பிரிவு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை, ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக் ஷ தலைமையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

### நிராகரிக்கப்பட்ட வாக்குகள்;

## காரணிகளைப் பட்டியல் படுத்தியது தேர்தல் வன்முறைக் கண்காணிப்பகம்

கொழும்பு, ஓக.10

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குகள் நிராகரிக்கப்பட்டமைக்கு, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் நான்கு காரணிகளைத் தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் தேர்தல் அறிவு, முறையாக வாக்களித்திருக்காமை, தவறான தெரிவுகள் என்பவற்றோடு ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்ட பிளவின் காரணமாகப் பெரும்பாலான ஐ.தே.க. ஆதரவாளர்கள் வாக்களிப்பைத் தவிர்த்திருந்தமை ஆகியனவே அதற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 7 இலட்சத்து 44 ஆயிரத்து 373 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இது நூற்றுக்கு 4.58 சதவீதமாகக் காணப்பட்டாலும் கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது மிக அதிகளவான எண்ணிக்கையாகும்.

இம்முறை தேர்தலில், 2019 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய ஒரு கோடி 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர்.

இதில் ஒரு கோடி 23 இலட்சத்து 43 ஆயிரத்து 302 பேர் வாக்களித்துள்ளனர்.

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் ஒரு கோடி 15 இலட்சத்து 98 ஆயிரத்து 929 வாக்குகள் செல்லுபடியானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் சாவு

கொழும்பு, ஓக.10
அம்பலாங்கொடை, ஆந்ததொல சந்தியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் அங்பலாங்கொடைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரகஹதொட பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார்.

குறித்த நபர், வெட்டுக் காயங்களுடன் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் இதுவரை கைதுசெய்யப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

## மருத்துவ முகாம்

சாவகச்சேரி, ஓக. 10
தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் இன்று திங்கட்கிழமை ஓய்வூதியர்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெறும் என்று கிளை முகாமையாளர் அ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

மருத்துவமுகாமில் கலந்துகொள்ளும் கிளையின் ஓய்வூதியர்கள் முற்பகல் 9 மணிக்கு முன்னர் வருகை தருமாறும் அறிவித்துள்ளார். (து-9)

## பாலியல் துஷ்பிரயோகம்; ஒருவர் கைது

கொழும்பு, ஓக.10
மாலபே பகுதியில் வெளிநாட்டுப் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற குற்றச் சாட்டில் நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாலபேயிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள குறித்த வெளிநாட்டுப் பெண் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே, இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

அத்துருகிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள 30 வயதுடைய குறித்த நபர் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ரி2)

## துப்பாக்கி வைத்திருந்த நபரொருவர் கைது

கொழும்பு, ஓக. 10
சட்டவிரோதமான முறையில் கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் அம்பவலஹெட்டிமுல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


இதேவேளை குண்டு துளைக்காத ஆடையொன்றை அணிந்திருந்த நபரொருவரும் கேகாலை பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கொள்ளையடித்த தங்க மாலையை விழுங்கிய நபருக்கு விளக்கமறியல்

ஹற்றன், ஓக.10
தங்க மாலை ஒன்றை கொள்ளையடித்து அதை விழுங்கிய சந்தேகநபர் ஒருவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர் ஹற்றன் பௌத்த சங்கத்திற்கு செல்லும் வழியில் ஒரு பெண்ணின் தங்க மாலையை வழிப்பறி செய்து கொண்டு தப்பி ஓடிவிட்டார்.

பின்னர் கொள்ளையிடப்பட்ட நகை கொள்வனவு செய்யப்பட்ட நிலையத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு சந்தேகநபரைக் கைதுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அவரை சிங்கமலை புகையிரத சுரங்கப்பாதைப் பகுதிக்கு செல்லும் வழியில் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர் தன்னிடம் இருந்த தங்க மாலையை விழுங்கியுள்ளார். இதனையடுத்து அவர் டிக்கோயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு மேற்கொள்ளப்பட்ட எக்ஸ்ரே பரிசோதனையில் அவர் தங்க மாலையை விழுங்கிய விடயம் தெரியவந்துள்ளது. பின்னர் சந்தேகநபரை நீதவான் தமயந்தி பெர்ணான்டோ முன்னிலையில் முன்னிலைப் படுத்தியதைத் தொடர்ந்து, சந்தேக நபர் விழுங்கிய மாலையை சிறை மருத்துவரைக் கொண்டு வெளியே எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அதனைத் தொடர்ந்து மீண்டும் சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் நீதிவான் உத்தவிட்டுள்ளார். (ரி1)



நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலய 16ஆம் நாள் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. முருகன் வீதியுலா வருவதைப் படத்தில் காணலாம்.




### மனிதம் மலர்ந்திட வேண்டுமடி!

மனிதம் மலர்ந்திட வேண்டும்டி!
நல்லைத் திருத்தலம் நாடுங்கடி- நாட்டில்
நாளு மவனருள் தேடுங்கடி
தொல்லை துடைத்திட வேண்டுமடி- எங்கும்
தூய்மை துலங்கிட வேண்டுமடி!

மனிதம் மலர்ந்திட வேண்டுமடி- நாட்டில்
மாயை மறைந்திட வேண்டுமடி
புனிதம் பொழிந்திட வேண்டுமடி- நாடு
பூத்துக் குலுங்கிட வேண்டுமடி

சமத்துவம் ஓங்கிட வேண்டுமடி- என்றும்
சஞ்சலம் துஞ்சிட வேண்டுமடி!
கமத்தொழில் கருக்கொள வேண்டுமடி- நாட்டின்
கருவறை களிப்புற வேண்டுமடி!

உண்மை உருப்பெற வேண்டுமடி
ஊனம் ஒழிந்திட வேண்டுமடி
தன்மை தழைத்திட வேண்டுமடி- பாரில்
தருமம் தலைபெற வேண்டுமடி!

கலாபூஷணம் கலைமாமணி
கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

### தரணி போற்றும் தமிழ்க் கடவுள்

தரணி ஆள வந்த மைந்தன்
தமிழ்க் கடவுள் ஆனதென்ன
குறைகள் களைய வந்த வேலன்
மயில் ஏறி வந்ததென்ன
தந்தைக்கு உபதேசம் செய்தவன்
தண்டாயுத பாணியாய் நின்றதென்ன
உனைத் தேடி நாம் வந்த வேளை
நீ நல்லூரில் போய் உறைந்ததென்ன?

லிங்கேஸ்வரன் ஜனார்த்தனன்
மறவன்புலோ மத்தி



ஆர்.சனத்

# ரணில்: எழுச்சியும் வீழ்ச்சியும்


## 42 ஆண்டு கால வெற்றிக்கு முடிவு

இலங்கை அரசியல் வரலாற்றிலேயே தொடர்ச்சியாக 42 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து சாதனை படைத்துள்ள ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு மாவட்டத்தில் 5 பொதுத்தேர்தல்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றும் சாதனை நிகழ்த்தியிருந்த நிலையில் இம்முறை படுதோல்வியடைந்துள்ளார். இது ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்வில் பெரும் தோல்வியாகக் கருதப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேசியப்பட்டியல் மூலம் ஆசனமொன்று கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அதன் ஊடாக ரணில் விக்கிரமசிங்க சபைக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்டாலும் மக்கள் நீதிமன்றம் முன் அவர் தோல்வியடைந்துள்ளார்.

அரசியலில் தந்திரம், மந்திரம், நெளிவு, சுழிவு, சூழ்ச்சி, சதி என அத்தனை அம்சங்களையும் கரைத்து குடித்துள்ளரணில்விக்கிரமசிங்க, கால் நூற்றாண்டுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியையும் தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

இதுவும்கூட ஒருவகையான சாதனையாகவே பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இதற்கு முன்னர் ஐ.தே.கவுக்கு தலைமை தாங்கியவர்கள் இத்தனை ஆண்டுகள் தலைமைப் பதவியில் நீடிக்கவில்லை.

1947 முதல் 2015 வரை நடைபெற்றுள்ள 15 பொதுத்தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்திலேயே போட்டியிட்டது. இதில் 5 தேர்தல்களுக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை வழங்கியுள்ளார். இரண்டு தேர்தல்களில் மட்டுமே ஐ.தே.கவால் வெற்றிநடைபோடமுடிந்தது. (2001,2015).



இதற்கு முன்னரும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டிருந்தன. முக்கிய உறுப்பினர்கள் வெளியேறியிருந்தனர். ஆனால், சஜித் தலைமையிலான அணியின் வெளியேற்றமே பெரும் தாக்கமாக கருதப்படுகின்றது. பொதுத்தேர்தலில் ஒரு தொகுதியைக்கூட கைப்பற்றமுடியாத நிலை ஐ.தே.கவுக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியால் பிரதான எதிர்க்கட்சி என்ற பதவியைக்கூட தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போயுள்ளது, கொழும்பு மாவட்டத்தில் விருப்புவாக்கு பட்டியலில் ரணிலுக்கு இடமே இல்லை என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

**ரணில் சந்தித்த பொதுத்தேர்தல்கள்.......**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 1970 ஆம் ஆண்டுமுதல் செயற்பாட்டு அரசியலில் இறங்கினாலும் 1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில்தான் முதல் தடவையாக போட்டியிட்டார்.

1977 ஜூலை 21 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்திலுள்ள பியகம தொகுதியில் - கன்னித் தேர்தலை எதிர்கொண்ட ரணில் விக்கிரமசிங்க, 22 ஆயிரத்து 45 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்றது. ஜே.ஆர்.ஜெயவர்தனவே தலைமைத்துவம் வழங்கினார்.

1978 இல் புதிய அரசியல் யாப்பு இயற்றப்பட்ட பின்னர், சர்வஜன வாக்கெடுப்புமூலம் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் மேலுமொரு தவணைக்கு நீடிக்கப்பட்டதால் பொதுத்தேர்தல் 1989 இல்தான் நடைபெற்றது. இத் தேர்தலிலும் ரணில் விக்கிரமசிங்க கம்பஹா மாவட்டத்தில் களமிறங்கினார். 86 ஆயிரத்து 477 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

ரணசிங்க பிரேமதாச தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியே இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றது. கொழும்பு மாவட்டத்தையும் கைப்பற்றியது.

1994 ஒகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க, 2 லட்சத்து 91 ஆயிரத்து 194 வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடம் பிடித்தார். எனினும், இந்தத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்விகண்டது. சந்திரிக்கா தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது. கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இத்தேர்தலின் பின்னர் 1994 இல் கட்சித் தலைவராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். கட்சியிலிருந்து வெளியேறி மீண்டும் தாய்வீடு திரும்பிய காமினி திஸாநாயக்க பிரதான எதிர்க்கட்சி தலைவரானார்.

2000 ஒக்ரோபர் 10 ஆம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பிரதம வேட்பாளராக கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க 3 லட்சத்து 63 ஆயிரத்து 668 வாக்குகளைப் பெற்றார். இத்தேர்தலில் சந்திரிகா தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றிருந்தாலும் கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கவே வெற்றிநடைபோட்டது. 10 ஆசனங்களைக் கைப்பற்றியது.

எனினும், 11 மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, 2001 டிசம்பர் 05 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் ஐ.தே.க. வெற்றிபெற்றது. 4 லட்சத்து 15 ஆயிரத்து 686 வாக்குகளைப்பெற்று கொழும்பு மாவட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க முதலிடம் பிடித்தார். ஐ.தே.க.வே கொழும்பு மாவட்டத்தில் வெற்றிக்கொடி நாட்டியது.

2004 ஏப்ரல் 02 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் கொழும்பில் போட்டியிட்ட ரணில் விக்கிரம சிங்க, 3 லட்சத்து 29 ஆயிரத்து 524 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றிபெற்றிருந்தாலும் கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கவே வாகை சூடி, 9 ஆசனங்களைக் கைப்பற்றியது.

2010 நடைபெற்ற பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க, 2 லட்சத்து 32 ஆயிரத்து 957 வாக்குகளைப்பெற்று ஐ.தே.க. பட்டியலில் முதலிடம் பிடித்தாலும் மாவட்டத்தில் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டார். விமல்வீரவன்ஸவே முதலிடம் பிடித்தார். கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே 10 ஆசனங்களைக் கைப்பற்றி முன்னிலை வகித்தது.

2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க வரலாற்று வெற்றியைப் பதிவுசெய்தார். 5 லட்சத்து 566 விருப்பு வாக்குகளைப் பெற்றார். அதுவரை நடந்த பொதுத் தேர்தல்களில் வேட்பாளர் ஒருவர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்குகள் இவைதான். இதற்கு முன்னர் 1994 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிக்கா அம்மையார் கம்பஹா மாவட்டத்தில் 4 லட்சத்து 64 ஆயிரத்து 588 வாக்குகளைப் பெற்றிருந்தார். கொழும்பு மாவட்டத்திலும் ஐ.தே.கவே கோலோச்சியது. இப்போது ரணில் 2020 பொதுத்தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளார்.

> **அரசியலில் தந்திரம், மந்திரம், நெளிவு, சுழிவு, சூழ்ச்சி, சதி என அத்தனை அம்சங்களையும் கரைத்து குடித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, கால் நூற்றாண்டுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியையும் தக்க வைத்துக்கொண்டுள்ளார். இதுவும்கூட ஒருவகையான சாதனை யாகவே பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இதற்கு முன்னர் ஐ.தே.கவுக்கு தலைமை தாங்கியவர்கள் இத்தனை ஆண்டுகள் தலைமைப் பதவியில் நீடிக்கவில்லை.**

# ஐ.தே.க. அழிவதைத் தடுக்க சஜித்திடம் அதை ஒப்படையுங்கள்

## ஹர்ஷன ராஜகருணா கோரிக்கை

கொழும்பு, ஓக. 10

பழமைவாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாதொழிக்க முயற்சிக்காமல், மக்கள் வழங்கியுள்ள ஆணைக்கு மதிப்பளித்து அதன் தலைமைப் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குப் பெற்றுக்கொடுக்குமாறு தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள ஹர்ஷன ராஜகருணா, தங்களுடன் இணைந்து பயணிக்குமாறு ஐ.தே.க. வினருக்கு அழைப்பும் விடுத்துள்ளார்.



எல்லை நிர்ணய பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கி குறுகிய கால இடைவெளியில் மக்கள் அதற்கு வழங்கியுள்ள ஆணையையும் ஆதரவையும் நாங்கள் வரவேற்கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் மீதும் எங்கள் மீதும் நம்பிக்கைகொண்டு மக்கள் எமக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். நாடாளுமன்றத்தில் 54 உறுப்புரிமைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். இவர்களுக்காக நாங்கள் முன்னின்று செயற்படுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான எங்கள் தொடர்பு பற்றி பலரும் வினவி வருகின்றனர். ஐ.தே.க. பற்றிய தங்கள் தீர்மானத்தை மக்கள் பொதுத்தேர்தல் ஊடாகத் தெரிவித்திருக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மீது பற்றுக்கொண்டவன் என்ற வகையில் எங்களுடன் இணைந்து செயற்படுமாறு நான் அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

ஐ.தே.க.வின் தலைமைப் பொறுப்பை சஜித் பிரேமதாசவுக்கு பெற்றுக்கொடுத்து அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். ஐ.தே.க.வின் தலைமைத்துவத்துக்கு சஜித்தே பொருத்தமானவர். அதனை மக்களும் உறுதி செய்துள்ளனர் எனத் தெரிவித்தார். (து)

# பெய்ரூட் நகர பெருவெடிப்பில் இலங்கைப் பெண்கள் பாதிப்பு

கொழும்பு, ஓக. 10



பெய்ரூட் நகரில் இடம்பெற்ற பெரு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த அனைத்து இலங்கையர்களும் பெண்கள் என அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் உறுதி செய்துள்ளது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 15 ஆக அதிகரித்துள்ளது.

லெபனானில் நிர்கதிக்குள்ளாகியுள்ள 285 இலங்கையர்களை எதிர்வரும் 15ஆம் திகதி நாட்டுக்கு அழைத்துவர திட்டமிடப்பட்டுள்ளது என லெபனான் மற்றும் சிரியாவுக்கான இலங்கை தூதுவர் ஷானி கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

வெடிப்புச் சம்பவத்தில் பெய்ரூட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதுரகத்துக்கும் அதிகாரிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. அவற்றை சீரமைக்கும் அதேவேளை பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்குநிவாரணங்களை வழங்குவதற்காகவும் தூதரகம் நாளாந்தம் இயங்குகின்றது. தூதுவர் ஷானி கருணாரட்ன பெய்ரூட் நகரில் ஏற்பட்ட இந்த இடர் குறித்து அங்கு நேரடியாக விஜயம் செய்து அறிந்து கொண்டுள்ளார். இதுவரை இலங்கையர்கள் எவரும் உயிரிழக்கவில்லையென அவர் தெரிவித்துள்ளார். பெய்ரூட்டில் காயமடைந்த 15 இலங்கையர்களும் பெண்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்கள் கைது

கொழும்பு, ஓக. 10

ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸ மற்றும் பொரளை ஆகிய பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனைகளின்போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரத்மலானை பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ரத்மலானை பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய பெண்ணொருவரே இவ்விதம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து இரண்டு கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொரளை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற மற்றுமொரு தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 8 கிராம் 450 மில்லி கிராம் ஹெரோய்னுடன் மற்றைய பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரள்ள பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (து)

# மஹிந்தவின் பதவியேற்பு; சுப்பிரமணியனுக்கும் அழைப்பு

கொழும்பு, ஓக. 10

இலங்கையின் நான்காவது பிரதமராகப் பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ச, தனது பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தனக்கு தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்தார் என்று பா.ஜ.க மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

எனினும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் மற்றும் போக்குவரத்து நடைமுறைகள் காரணமாக அவரின் அழைப்பை ஏற்று அங்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம் தொபாக சுப்பிரமணியன் சுவாமி தனது ருவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அழைப்பு வந்துள்ளமை குறித்து தான் மகிழ்ச்சியடைந்தேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (து)

# தொடர்ச்சியான மழை கண்டியில் வெள்ளம்!

கண்டி, ஓக. 10

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாக கண்டி மாவட்டத்தின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நாட்டின் சில மாவட்டங்களில் தற்போது சீரற்ற காலநிலை நிலவுகின்றது. சப்ரகமுவ, மத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் தொடர்ச்சியாகவும் பகுதியளவிலும் கனமழை பெய்கின்றது. மாவட்டங்களைப் பொறுத்த வரையில் கண்டி மாவட்டம் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. அங்கு கடும் காற்றுடன் கனமழை பெய்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பங்களாதேஷ் பிரதமரும் வாழ்த்து

கொழும்பு, ஓக. 10

பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பெற்றுக்கொண்ட பெருவெற்றிக்கு பங்களாதேஷ் பிரதமர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டு பிரதமர் ஹீக் ஹசீனா வாழ்த்து செய்தியை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமது நாட்டுக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளுமாறும் அவர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஏற்கனவே இந்தியா உட்பட்ட பல நாடுகள் பிரதமருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

# உர வகைகளைப் பெற 'டோக்கன்' பெறவும்

சாவகச்சேரி, ஓக. 10

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உரவகைகள் பெறுவதற்கான 'டோக்கன்கள்' எதிர்வரும் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளன.

நாளைமறுதினம் புதன்கிழமை தனங்களப்பு கிராம அலுவலர் அலுவலகத்திலும், மறுநாள் வியாழக்கிழமை சாவகச்சேரியில் உள்ள சதானந்தன் இல்லத்திலும் வழங்கப்படுமென்று அமைப்பின் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் காணிக்கான இலக்கம், இந்த வருடம் சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு, கமநல சேவைகள் நிலையத்தில் ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியனவற்றைக் கொண்டு வருமாறும் அறிவுறுத்தியுள்ளார். (து-9)

# கசிப்பு வைத்திருந்தனரென தருமபுரத்தில் இருவர் கைது

கிளிநொச்சி, ஓக. 10

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரபொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்புக்குளம் மாயவனூரில் வைத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இருவரிடமிருந்தும் 42லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் என்பவை மீட்கப்பட்டுள்ளன.



பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் அவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து-113)

## இறுதி முடிவெடுக்கும்வரை ஐ.தே.க. தலைவர் ரணிலே

*அதன் முக்கிய தலைவர்கள் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 10

**கட்சியின் தலைமைப் பதவி குறித்து இறுதி முடிவெடுக்கப்படும் வரை ரணில் விக்கிரமசிங்கவே கட்சியின் தலைவராக தொடர்ந்தும் நீடிப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

இது குறித்து கட்சித் தலைமை அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கட்சியின் முக்கிய தலைவர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர். அதன்போதே தலைமைத்துவம் குறித்து தற்போதைக்கு முடி வெடுப்பதில்லை என்று தீர்மானித்துள்ளனர்.

இதனால் இறுதிமுடிவெடுக்கும் வரை ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்தும் கட்சியின் தலைவராக நீடிப்பார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல் முடிவின் பின்னர் முக்கிய தலைவர்களைச் சந்தித்த ரணில், தலைமைப் பதவியிலிருந்து விலகுவது குறித்த தமது விருப்பத்தை வெளியிட்டிருந்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

# தேசியப் பட்டியல் நியமனத்தில் சஜித் – சக தலைவர்கள் சண்டை!

## ஐ.ம.ச. அலுவலகத்தில் சம்பவம்

**கொழும்பு, ஓக. 10**

**முன்னர் உறுதியளித்தபடி ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தேசியப் பட்டியல் நியமனம் வழங்கப்படாவிட்டால், த.மு.கூ. (6), ஸ்ரீ.மு.கா. (5), அ.இ.ம.கா. (4) ஆகிய சிறுபான்மைக் கட்சிகளின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றில் தனிக்குழுவாக இயங்க வேண்டிவரும் என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தலைமைப்பீடத்துக்கு சிறுபான்மைக் கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.**

ஐ.ம.ச. தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இரவுவரை நடைபெற்ற பேச்சின் போதே அந்தக் கட்சிகள் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.

திங்கட்கிழமை வரை இதற்காக காலக்கெடு விதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்திருக்கும் 7 தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிகளுக்கும் சிங்களவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையில் ஐ.ம.ச. தலைமை ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்படும் நிலையிலேயே நேற்றுமுன்தினம் இரவு அவசர கூட்டத்தை த.மு.கூ., ஸ்ரீ.மு.கா. மற்றும் அ.ம.கா. கோரியிருந்தன.

அந்தக் கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படாத நிலையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## அமைச்சர்கள் தெரிவில் பெரமுன தீவிர பணி

கொழும்பு, ஓக. 10

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து அமைச்சர்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகல காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சரவை 12ஆம் திகதி அல்லது 14ஆம் திகதி பதவியேற்கலாம். புதிய அமைச்சர்களை ஜனாதிபதியும் பிரதமரும் மாத்திரம் தெரிவுசெய்வார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சரவையில் 26 அமைச்சர்கள் மாத்திரம் இடம்பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# குடும்ப உறவுமுறைப் பின்னணியோடு நாடாளுமன்றம் புகும் புதிய உறுப்பினர்கள்

கொழும்பு, ஓக. 10

நாட்டின் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலில் பிரபல அரசியல் தலைவர்களின் உறவினர்கள் பலரும் தெரிவாகியுள்ளனர். முன்னரும் அவ்வாறு பலர் இருந்துவந்த நிலையில், இந்தமுறை இது மேலும் அதிகரித்துள்ளது.

இவர்களில் 63 பேர் புதிய உறுப்பினர்கள். அவர்களில் 53 பேர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஊடாக நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 20 திகதி சம்பிரதாய ரீதியில் ஒன்பதாவது நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய அமர்வுகளில் தந்தையர்கள் சிலர் புதல்வர்களுடனும்,சில உறுப்பினர்கள் உறவினர்களுடனும் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

பிரதமராக மஹிந்த ராஜபக்ச நேற்றுப் பதவியேற்றுள்ள நிலையில், அமைச்சரவை கண்டி தலதா மாளிகையில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் பதவியேற்க உள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இரண்டாவது அமைச்சரவை இதுவாகும்.

- பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் புதல்வர் நாமல் ராஜபக்ஸ
- சமல் ராஜபக்ஸவின் புதல்வர் ஷஷீந்திர ராஜபக்ஸ
- தினேஷ் குணவர்தனவின் புதல்வர் யதாமினி குணவர்தன
- ஜனக பண்டார தென்னகோனின் புதல்வர் பிரமித்த பண்டார தென்னகோன்
- பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் சகோதரர் சமல் ராஜபக்ஸ
- பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவின் சகோதரியின் மகன் நிபுண ரணவக்க
- மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் புதல்வர் சஜித் பிரேமதாச
- முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகரவின் புதல்வர் காஞ்சன விஜேசேகர
- முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத்தின் புதல்வர் கனக ஹேரத்
- மறைந்த முன்னாள் பிரதமர் டி.எம் ஜயரட்னவின் புதல்வர் அனுராத ஜயரத்ன
- முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுக மவின் உறவினரின் மகன் திலும் அமுனுகம
- மறைந்த முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்கவின் புதல்வர் விதுர விக்ரமநாயக்க
- மறைந்த முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் புதல்வர் லொஹான் ரத்வத்த
- மறைந்த முன்னாள் அமைச்சர் டொக்டர் ஜயலத் ஜயவர்தனவின் புதல்வர் காவிந்த ஜயவர்தன
- மறைந்த முன்னாள் முதலமைச்சர் பெர்டி பிரேமலால் திசாநாயக்கவின் புதல்வர் துமிந்த திசா நாயக்க
- மறைந்த முன்னாள் அமைச்சர் ரெஜி ரணதுங்கவின் புதல்வர் பிரசன்ன ரணதுங்க
- மறைந்த முன்னாள் அமைச்சர் கலாநிதி ரிச்சட் பத்திரணவின் புதல்வர் ரமேஷ் பத்திரண
- முன்னாள் அமைச்சர் ரஞ்சித் சொய்ஸாவின் மனைவி முதிதா பிரசாந்தி
- மறைந்த முன்னாள் அமைச்சர் அமரசிறி தொடம்கொடவின் புதல்வர் இசுரு தொடம்கொட
- மறைந்த முன்னாள் அமைச்சர் அமரசிறி தொடம்கொடவின் சகோதரியின் புதல்வரான சந்திம வீரக்கொடி
- மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் எச்.ஜி.ஜி. நெல்சனின் புதல்வர் கிங்ஸ் நெல்சன்
- மறைந்த முன்னாள் முதலமைச்சர் மொஹான் சாலிய எல்லாவலவின் புதல்வர் அகில எல்லாவல
- மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் தர்மதாஸ வன்னியாரச்சியின் புதல்வி பவித்ரா வன்னியாரச்சி
- மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வர் ஜீவன் தொண்டமான்
- மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹீன்மஹத்தயா லியனகேவின் புதல்வர் வருண லியனகே
- மறைந்த முன்னாள் அமைச்சர் காமினி அத்துகோரளவின் சகோதரி தலதா அத்துகோரள
- முன்னாள் அமைச்சர் சரத்சந்திர ராஜகருணாவின் புதல்வர் ஹர்ஷன ராஜகருணா
- மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ கவிரத்னவின் மனைவி ரோஹினி கவிரத்ன விஜேரத்ன
- முன்னாள் அமைச்சர் கலாநிதி ஜகத் பாலசூரிய மற்றும் முன்னாள் ஆளுநர் குமாரி பாலசூரியவின் புதல்வர் தாரக பாலசூரிய
- இலங்கை மக்கள் கட்சியின் ஆரம்ப செயலாளர் ரஞ்சித் நவரத்னவின் புதல்வர் அசங்க நவரத்ன
- முன்னாள் மாகாண சபை உறுப்பினர் டி.வி. உபுலின் புதல்வர் டி.வி. சானு
- அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் புதல்வர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
- முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் உறவினர் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்
- மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் தயா டீ.பெஸ்குவலின் சகோதரரின் புதல்வர் அனுப பெஸ்குவல்
- மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் ரூபா கருணாதிலக்கவின் உறவினர் மகன் கயந்த கருணாதிலக்க
- ஊவா மாகாணத்தின் முன்னாள் அமைச்சர் அனுர விதான கமகேவின் சகோதரர் தேனுக விதான கமகே
- மறைந்த முன்னாள் பிரதியமைச்சர் எச்.ஆர்.மித்ரபாலவின் புதல்வர் துஷ்மந்த மித்ரபால
- முன்னாள் அமைச்சர் அதாவுட செனவிரத்னவின் உறவினர் மகன் உதயகாந்த குணதிலக்க
- மறைந்த முன்னாள் அமைச்சர் எம். வின்சன்ட் பெரேராவின் புதல்வர் சுஜித் சஞ்சய பெரேரா
- மறைந்த முன்னாள் அமைச்சர் எஸ்.டி.ஆர். ஜயரத்னவின் புதல்வர் பியங்கர ஜயரத்ன
- 94 ஆம் ஆண்டில் நாடாளுமன்றுக்குத் தெரிவாகி வாகன விபத்தில் பலியான கொட்ஃப்ரி பெர்னாண்டோவின் உறவினர் மகன் அருந்திக பெர்னாண்டோ
- மறைந்த முன்னாள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவின் புதல்வர் நிரோஷன் பெரேரா
- மறைந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீடின் மருமகன் அப்துல் ஹலீம் மொஹமட்
- முன்னாள் பிரதியமைச்சர் எச்.பி.சேமசிங்கவின் புதல்வர் ஷெஹான் சேமசிங்க
- முன்னாள் பிரதியமைச்சர் எஸ்.டபிள்யு.அலவத்துவலவின் புதல்வர் ஸே.சி.அலவத்துவல
- முன்னாள் மாகாண சபை உறுப்பினர், கொல்லப்பட்ட தேஷபந்து நாமல் குணவர்தனவின் சகோதரி கோகிலா ஹர்ஷனி குணவர்தன
- இலங்கை மக்கள் கட்சியின் மறைந்த தலைவர் விஜயகுமாரதுங்கவின் உறவினர் மகன் ரஞ்சன் ராமநாயக்க
- மறைந்த முன்னாள் அமைச்சர் சாலிந்த திசா நாயக்கவின் மனைவி மஞ்சுளா திசாநாயக்க
- மறைந்த முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேவின் மனைவி சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே
- முன்னாள் நிதியமைச்சர் கலாநிதி என்.எம்.பெரேராவின் உறவினர் மகன் பேராசிரியர் திஸ்ஸ விதாரண
- முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரீ லால் விக்ரமசிங்கவின் மனைவி ராஜிகா விக்ரமசிங்க. (த)

# அமைச்சுக்கள் முறைப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



**கொழும்பு, ஓக.10**
**நல்லாட்சி அரசாங்கம் பகிர்ந்தளித்தது போன்று அல்லாமல், சரியான முறைப்படி அமைச்சுக்களும் விடயங்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஹம்பாந்தோட்டையில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக எம்முடன் இருந்த 53 பேருக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அமைச்சுப் பதவிகளை நான் பெறுவதற்கு முன்னர், எனது தந்தைக்காக முன்நின்றவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக எம்முடன் 53 பேர் இருந்தனர். அமைச்சுப் பதவிகள் கிடைக்கும் வாய்ப்புகள் இருந்தும் பணத்திற்கு அடிபணியாமல், வீதியில் இறங்கி, மஹிந்தவுடன் 53 பேர் செயற்பட்டனர்.
அவர்களுக்கு நியாயம் கிடைத்தன் பின்னர் தலைவர்களுடன் என்னால் பேச முடியும். மாவட்டத்தை அடிப்படையாக கொண்டல்லாமல் கொள்கைகளை அடிப்படையாக வைத்தே அமைச்சுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நல்லாட்சி அரசாங்கம் பகிர்ந்தளித்தது போன்று அல்லாமல் சரியான முறைப்படி அமைச்சுக்களும் விடயங்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். செழிப்பான எதிர்காலத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமானவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்.
இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஸ, அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிட்டுள்ளார். (ரி1)

# எனக்கு வரவேண்டிய வாக்குகள் திருட்டு!

## சுயேட்சைக்குழு வேட்பாளர் குற்றச்சாட்டு

வவுனியா, ஓக. 10
நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் சூறையாடப்பட்டிருக்கின்றன என்று வன்னி பட்டதாரிகள் சங்க தலைவரும், சுயேச்சைக் குழு 19 இல் போட்டியிட்ட வேட்பாளருமான ம.ஆனந்தராஜா தெரிவித்தார். வவுனியாவில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தமுறை தேர்தலில் தேசிய ஜனநாயக மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி, சுயேச்சை குழு இலக்கம்19 இல் முதன்மை வேட்பாளராக போட்டியிட்டிருந்தேன். நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாக சில அதிருப்திகள் எமக்கு இருக்கின்றன.
நான் வன்னி பட்டதாரிகள் சங்கத்தின் தலைவராக இருப்பதால் பல பட்டதாரிகளின் ஆதரவுடன், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களை வீடுவீடாகச் சென்று சந்தித்து எங்களுடைய நிலைப்பாடுகள் கொள்கைகளை விரிவாக தெரியப்படுத்தியிருந்தோம். இதன் பயனாக ஆகக்கூடுதலாக 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளையும், குறைந்தளவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளையும் நிச்சயம் நாம் பெற்றிருப்போம் என்று எமது ஆதரவாளர்களுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம். துரதிஸ்டவசமாக மிகப்பெரிய ஜனநாயக மோசடியின் விளைவாக அந்த வாக்குகளை நாம் இழந்திருக்கின்றோம். நெருங்கிய உறவினர்கள் நண்பர்களால், அளிக்கப்பட்ட வாக்குகள்கூட சூறையாடப்பட்டிருக்கின்றன. அது எப்படி நடந்தது என்பதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இல்லை . ஆனால் அளிக்கப்பட்ட வாக்குகள் இல்லை என்பதே உண்மை. மொத்தமாக 275 வாக்குகள் மாத்திரமே எமக்கு கிடைக்கப் பெற்றிருக்கின்றன.
உயர்கல்விச் சமூகத்துக்கும் அபிவிருத்தி சார் அரசியலுக்கும் ஏற்படுத்தப்பட்ட ஏமாற்றமாகவும், அபாய ஒலியாகவும் நாங்கள் இதனைக் காண்கின்றோம். எமது ஆதரவாளர்கள் மிகவும் வேதனையுடன் இருக்கின்றார்கள். அவர்களுக்கு நாம் ஒரு தெளிவான செய்தியை சொல்கிறோம். இது இறுதி முடிவல்ல. இதனை ஆரம்பமாக எடுத்துக்கொள்ளுங்கள். இந்த ஜனநாயக உரிமை மீறலை யார் செய்தார்களோ அவர்கள் விரைவில் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்ற செய்தியை சொல்லிக்கொள்கின்றோம்.
இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு விரிவான கடிதம் ஒன்றை எழுத இருக்கின்றோம். சட்டரீதியான ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டுள்ளோம். என்றார். (கு-110)



# கொரோனா பரிசோதனை இயந்திரம் அன்பளிப்பு

மன்னார், ஓக. 10
சுவிஸ் தாய்நிலம் அறக்கட்டளையினரால் மன்னார் பெரிய குஞ்சுக்குளம் சென். லூட்ஸ் மகாவித்தியாலத்திற்கு கடந்த வாரம் கொரோனா பரிசோதனை இயந்திரம் கையளிக்கப்பட்டது.
இதனை சுவிஸ் தாயக அறக்கட்டளை மன் னார் இணைப்பாளர் சகாயம் என்பவர் அன்பளிப்புச் செய்தார். (ரி1-213)

# 75 மி.மீற்றருக்கு அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகலாம்

கொழும்பு, ஓக.10
சப்ரகமுவ, மேல் மற்றும் மத்திய மாகாணங்களின் பல பகுதிகளில் 75 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.
அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,
சப்ரகமுவ, மத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
சப்ரகமுவ, மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.
ஊவாமாகாணத்தில் சில இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (ரி1)

# மாட்டுடன் மோதி தாயும், மகனும் படுகாயம்

மதவாச்சி, ஓக.10
மதவாச்சி பகுதியில் மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த தாயும், மகனும் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
பன் குளத்திலிருந்து கந்தளாய் நோக்கி மரண வீடு ஒன்றுக்கு தாயும், மகனும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது குறுக்கே வந்த எருமை மாட்டுடன் மோட்டார்சைக்கிள் மோதியுள்ளது.
இந்த விபத்தில் தாயும், மகனும் படுகாயங்களுக்கு இலக்கான நிலையில் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரி1)

# தேசியப்பட்டியல் பங்கீடு; கட்சிகளுக்குள் பிடுங்குப்பாடு!

கொழும்பு, ஓக.10
தேசியப் பட்டியல் ஆசனப் பங்கீடு தொடர் பில் இறுதி முடிவெடுக்க முடியாமல் கட்சி களுக்குள் இழுபறி நிலைமை தோன்றியுள்ளது. தேசியப்பட்டியல் ஆசனத்தை இலக்குவைத்து அரசியல் பிரமுகர்கள் அழுத்தங்களை பிரயோகிப்பதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் 27 லட்சத்து 71 ஆயிரத்து 984 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு தேசியப் பட்டியல் ஊடாக எழுவரை நியமிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சஜித் அணியுடன் இணைந்து போட்டியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் ஆகியன தமது கட்சிகளுக்கு தலா ஒரு தேசியப்பட்டியல் வீதம் வேண்டும் என வலியுறுத்தியுள்ளன. மறுபுறத்தில் சஜித்தின் சகாக்களும் தமக்கு வாய்ப்பு வேண்டும் என கோருகின்றனர். இதனால் எவ்வாறு எழுவரை தெரிவுசெய்வது, பங்காளிகளுக்கு பங்கிடமுடியுமா என்பது தொடர்பில் சஜித்துக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இன்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைத்துள்ள ஒரு தேசியப்பட்டியல் மூலம் யாரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவது என்பது தொடர்பில் இன்று அறிவிக்கப்படும் என அந்தக் கட்சியின் உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இதற்காக விசேடகூட்டமொன்று சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது. அதேவேளை, அத்துரலிய ரத்தன தேரர் தலைமையிலான 'அபே ஜாதிக கட்சி'க்கு கிடைத்துள்ள ஓர் ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்பதிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் இன்று இறுதி முடிவு எடுக்கப்படலாம் என நம்பப்படுகின்றது.
தேசிய மக்கள் சக்தியும் தமது தேசியப்பட்டியல் வேட்பாளர் யார் என்பதை இன்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக்கட்சி ஆகியன தேசியப்பட்டியல் உறுப்பினர்களை அறிவித்துவிட்டன. (எ-44)

# தமிழ்ச் சமூகத்துக்காக எனது குரல் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்கும்

## வேலுகுமார் வாக்குறுதி

**கொழும்பு, ஓக. 10**

**கண்டி மாவட்டத்தில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்காக தமிழ்பேசும் சமூகமாக ஓரணியில் திரண்டு வாக்களித்த அத்தனை நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ் பேசும் மக்களுக்கான எனது குரல் தொடர்ந்தும் தேசிய மட்டத்தில் ஓங்கி ஒலிக்கும்' என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றி வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.**

பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட வேலுகுமார் இம்முறை வரலாற்று வெற்றியை நிலைநாட்டினார். அதாவது கண்டி மாவட்டத்தில் தமிழ் வேட்பாளர் ஒருவர் தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் தேர்தலில் வெற்றிபெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்த நிலையில் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

'மிகவும் நெருக்கடியான, அதேபோல் சவாலான சூழ்நிலைகளுக்கு மத்தியிலேயே இம்முறை பொதுத் தேர்தலுக்கு முகங்கொடுத்தோம். எதிரணி வேட்பாளரான எனக்கு எதிராக ஒட்டுமொத்த அரச இயந்திரமும் தீவிரமாக செயற்பட்டது. அதுமட்டுமல்ல திட்டமிட்ட அடிப்படையில் சதிகார அரசியலும் முன்னெடுக்கப்பட்டது. பிரச்சாரங்கள் ஓய்ந்து இறுதி



கட்டத்தில் கூட சாக்கடை அரசியலுக்கே உரித்தான சில நடவடிக்கைகளை எனக்கு எதிராக முன்னெடுத்திருந்தனர். சமூக வலைத்தளங்களிலும் வதந்திகள் பரப்பினர்.

மறுபுறத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்கும் பேரினவாதிகளின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக சில வேட்பாளர்கள் தேசியக் கட்சிகளில் அணிவகுத்து நின்றனர். இவ்வாறு மக்களை திசைதிருப்புவதற்காக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் என்மீது நம்பிக்கைவைத்து கண்டி மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஓரணியில் திரண்டு அமோக ஆதரவை வழங்கியுள்ளனர். கடந்த காலப்பகுதியில் என்னால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு கிடைத்த அங்கீகாரமாகவே இதனைக் கருதுகின்றேன். 2015ஆம் ஆண்டு மக்கள் எனக்கு வழங்கிய ஆணையின்பிரகாரம் கண்டி மாவட்டத்தில் பல வேலைத்திட்டங்களையும், அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்தேன். எனது மனச்சாட்சியின் பிரகாரம் சேவைகளில் திருப்தி இருந்தது. இதனால் தான் இம்முறை உரிமையுடன் வாக்குக் கேட்டு வந்தேன். எனது மக்கள் சொந்தங்களும் நேசக்கரம் நீட்டியுள்ளனர். எனவே, இனிவரும் காலப்பகுதியிலும் மக்களுக்கான எனது அரசியல் பணி தொடரும். கண்டி மாவட்ட தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலித்துக்கொண்டிருப்பேன்' என்றார். (ம)

# இம்முறை தேர்தலில் அதிக முறைகேடுகள்

## பாலித தெவரப்பெரும குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 10



இம்முறை இடம்பெற்ற தேர்தலில் அதிகளவான தேர்தல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது விருப்பு வாக்கு எண்ணிக்கை லட்சத்தைக் கடந்து செல்லும். எனினும் இம்முறை எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு அது குறைவடைந்துள்ளது. இதனால், இம்முறை வெளியான தேர்தல் முடிவுகளை ஏற்க முடியாது. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (ம)

# ஏற்றுமதி மேம்பாட்டு சபையின் பணிப்பாளரானார் சித்ராஞ்சலி!

கொழும்பு, ஓக. 10



இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையின் புதிய பணிப்பாளராக சித்ராஞ்சலி திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். ஒகஸ்ட் 4 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சித்ராஞ்சலி 34 ஆண்டு காலமாக கொள்கை மற்றும் மூலோபாய திட்டமிடல், சந்தை மேம்பாடு, தயாரிப்பு மேலாண்மை, தொழில்துறை தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ஆகிய பிரிவுகளில் சேவையாற்றி வந்துள்ளார்.

1986ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையில் ஆராய்ச்சி உதவியாளராக சேவையில் இணைந்த அவர் ஏற்றுமதி மேம்பாடு குறித்த அறிவு மற்றும் அனுபவத்தை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பொதுச்செயலராகத் தொடரும்படி கோரிக்கை விடுத்தார் சம்பந்தன்

## துரைராஜசிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 10

பொதுச்செயலாளர் பதவியை துறக்க வேண்டாமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளாரென தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நிறைவடைந்த பொதுத்தேர்தலில் மக்கள் எனக்கு ஆணை வழங்காதமையினால் பொதுச்செயலர் பதவியை துறக்க அனுமதி வழங்க வேண்டுமென இரா. சம்பந்தனிடம் கேட்டுக்கொண்டேன். எனினும் பல தேர்தல் கடமைகள் பொதுச்செயலர்களுக்கு இருக்கின்றது. மேலும் இவ்விடயம் தொடர்பாக எங்களுடைய பொதுச்சபைதான் தீர்மானம் எடுக்க வேண்டும். ஆகவே பதவியை துறக்கக் கூடாது என சம்பந்தன் கூறினார். இதனால் இந்த பணியை தொடர்ந்து செய்ய வேண்டிய பொறுப்புடையவனாக இருக்கின்றேன்' என்றார். (ம)

# சிறைக்கைதிகளை பார்வையிட விரைவில் மீண்டும் அனுமதி!

கொழும்பு, ஓக. 10

சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு மீண்டும் வெளியாட்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளதுஎனசிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் சிறைக்கைதிகளை பார்வையிட முடியும். இதற்கு தேவையான சுகாதார பரிந்துரைகள், சுகாதார அமைச்சினூடாக இன்று கிடைக்குமென சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான கைதியொருவர் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், சிறைக்கைதிகளைப் பார்வையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக அடுத்த கட்ட செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பொதுத்தேர்தலில் வெற்றி; நாமல் ஆலய யாத்திரை

கொழும்பு, ஓக. 10

பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற நிலையில், பிரதமர் மகிந்த ராஜபக்சவின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ச தனது மனைவியுடன் கதிர்காமம் முருகன் ஆலயம் மற்றும் கிரிவேஹர விகாரை ஆகியவற்றுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ச மற்றும் அவரது மனைவி ஆகியோர் கிரிவேஹர விகாரையில் விகாராதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டுள்ளனர். அவர் தனது மனைவியுடன் நேற்றுமுன்தினம் இந்த வழிபாட்டுத் தலங்களுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட புகைப்படங்களை நாமல் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவின் சார்பில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட நாமல் ராஜபக்ச விருப்பு வாக்குகளின் அடிப்படையில் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் கடலளவானது

## கென்சர்வேடிவ் கட்சியின் பிரமுகர் நெசிபி தெரிவிப்பு

லண்டன், ஓக. 10

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளானவை இலங்கையில் இதுவரை ஏற்பட்டிருக்காத கடலளவு மாற்றம் என பிரித்தானியாவின் கென்சர்வேடிவ் கட்சியின் பிரமுகரான லோர்ட் நெசிபி தெரிவித்தார்.

இலங்கை அரசின் ஆதரவாளரான அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசின் ஆதரவாளர்களில் ஒருவரான நான், குறித்த மாற்றத்தினை அங்கீகரிக்கும் நபர்களில் ஒருவராக இருக்கும் அதேவேளை பிரித்தானிய அரசாங்கம் மற்றும், பிரித்தானியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் வாழும் புலம்பெயர் சமூகங்களும் இதனை அங்கீகரிக்க வேண்டும். இது உண்மையிலேயே சுட்டிக் காட்டத்தக்க தேர்தல் முடிவு. உலகில் வேறெங்கும் காண முடியாத அளவில் இலங்கையின் சாதாரண பிரஜைகள் மீண்டும் வாக்களித்துள்ளனர்.

இதுவே உண்மையான செயற்படக்கூடிய ஜனநாயகம். இது இலங்கைக்கான புதிய விடியல். இந்த வாய்ப்பானது இலங்கையை ஒன்றிணைக்கக் கூடிய ஓர் யுகத்தினை உருவாக்குவதுடன் தனித் தமிழீழம் எனும் பிரிவினைவாதச் சிந்தனையை முற்றாக ஒழிக்கும்' என்றார். (ம)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 05 . 1932

மறைவு 23 . 07 . 2019

## அமரர் அப்புக்குட்டி நாகம்மா

திதி:- ஸப்தமி (10.08.2020)

அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம் தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகிறோம்!
எம் வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்!
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்.

– ஓம் சாந்தி –

கருகப்புலம்,
கனேஸ்வரம், அளவெட்டி.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 09 . 1942

இறப்பு 08 . 08 . 2020

## ஆறுமுகம் சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுந்தரலிங்கம் நேற்றுமுன்தினம் (08.08.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கனகம்மா இணையரின் ஆசை மகனும், காலஞ்சென்ற சிவபாலாம்பிகையின் அன்புக் கணவரும், சஞ்சீவனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.08.2020) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.00மணியளவில் 262,பிரதான வீதி, கொழும்புத் துறையில் அவரது இல்லத்தில் நடைபெற்று துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தொடர்பு:

சின்னையா சிவனேசன்
( + 1416 8888 950 - கனடா)

சஞ்சீவன் சிவனேசன்
( +1416 2714 487 - கனடா)

தகவல்:
மைத்துனர்மார், மைத்துனிமார்.

# கலையரசன்...

தொடர்பில் எனக்குத் தெரியாது. இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனோ அல்லது கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கமோ என்னுடன் கலந்துரையாடவில்லை. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்தது. அந்த ஆசனத்தை அம்பாறை மாவட்ட நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் கலையரசனுக்கு வழங்குவதாக, கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கம் மட்டக்களப்பில் நேற்று மதியம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவித்தார். இது தொடர்பான கடிதம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்றுக் காலை அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவை.சேனாதிராசாவிடம் கேட்டபோது, தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் நேற்று இரவு (நேற்றுமுன்தினம்) கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் என்னுடன் பேசினார். என்னை (மாவையை) நியமிப்பதற்கு சம்மதமா? என்று கேட்டார். அதற்குச் சம்மதம் தெரிவித்தேன்.

கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சித் தலைவர்களான சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு என்னை நியமிப்பதற்கு சம்மதம் தெரிவித்திருந்தனர். இந்த விடயங்களை இன்றுகாலை (நேற்று) கட்சியின் செயலர் துரைராஜசிங்கத்துக்குத் தெரியப்படுத்தினேன். தேசியப் பட்டியலுக்கு எனது பெயரைக் குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம். அனுப்பி வைக்குமாறு தெரிவித்தேன். ஆனால் எனது பெயர் குறிப்பிடப்படாமல் கலையரசனின் பெயர் குறிப்பிடப்பட்டமை எனக்குத் தெரியாது. இது தொடர்பில் என்னுடன் கூட்டமைப்பின் தலைவரோ அல்லது தமிழ் அரசுக் கட்சியின் செயலரோ பேசவில்லை, என்றார். (ஓ.5)

# தேவை

கோழிப் பண்ணை பராமரிப்பாளர்
அனுபவமுள்ள 25இலிருந்து 60வயதிற் குட்பட்ட ஆண் உடனடியாகத் தேவை.
இடம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
மாதச்சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 076 2001 385

# கண்ணீர் அஞ்சலி



## கந்தையா ராமலிங்கம்

**நிமிர்ந்த நடை நேரிய பார்வை**
**நேர்மையான உள்ளம் - தன்னில்**
**நாவடக்கம் கொண்டனீர்**
**எம் ஸ்தாபனத்தில் சாரதியானீர்**
**தம் கடமை அருமையானது**

அன்னாரது திடீர் மரணச்செய்தி கேட்டு நாம் அவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகளுக்கு ஆறுதல்களைக் கூறுவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

றூபா பன்முக வர்த்தகம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா இரத்தின சபாபதி



பிறப்பு 16.11.1930 இறப்பு 08.08.2020

யாழ். புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், மாணடித்தகுளம், கண்டாவளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இரத்தினசபாபதி கடந்த (08.08.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பர் - சின்னாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி அவர்களின் பாசமிகு மனைவியும், பத்மாவதி (லண்டன்), லீலாவதி (கண்டாவளை), சுசீலாவதி (புலோலி), பத்மநாதன் (லண்டன்), விமலாவதி (கண்டாவளை), புஸ்பவதி (லண்டன்), கலாவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணபிள்ளை (லண்டன்), நல்லதம்பி (கண்டாவளை), இராமநாதன் (புலோலி), ரதிராணி (லண்டன்), காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் சிவலிங்கம் (லண்டன்), தங்கவேல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், நளினி, இளங்கேசன், ராஜபுவனா, கார்த்திகா, கோசலை, சுமித்திரை, அஜந்தன், பிரவீனா, விமலகாந்தன், குகதாசன், கோபிகிருஷ்ணா, துர்க்கா, சகிரா, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பார்கவி, தருண், நவீனா, ஹரிசாந், வாசினி, பிரணவ், பிரணவி, ஆர்த்திகா, தீபிகன், கிருத்திக், ராயன், ஹரிசன், கவியுதா, சாகித்தியா, அனன்யா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கண்டாவளையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கண்ணாடளை இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 074 2571 தகவல்:- குடும்பத்தினர்

## தேசியப்பட்...

அனுப்பிய கடிதத்தால் பெரும் சர்ச்சை வெடித்திருந்தது. தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தனர். தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் தம்முடன் கலந்துரையாடாமல் தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்கப்பட்டமை தொடர்பில் கண்டனம் வெளியிட்டிருந்தனர்.

கட்சியின் பொதுச் செயலரை தொடர்பு கொண்ட மாவை.சோ.சேனாதிராசா கடுமையாகச் சாடியிருந்தார். இதனையடுத்து கலையரசனை நியமித்து அறிவித்த கடிதத்தை மீளப்பெறும் கடிதத்தை இன்று அனுப்பவுள்ளதாகத் தெரிவித்த துரைராஜசிங்கம், அதன் பின்னர் கூட்டமைப்பின் பங்காளிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனால் இந்த விவகாரத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

(ஓ,5,22)

## 15,000 பட்டதா...

ளில் நியமிக்கப்படுவர் என்றும் கல்வி அமைச்சை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா தொற்று மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக இந்த நியமனங்கள் தாமதமாகியிருந்தன என்று தற்போது அவை வழங்கப்படவுள்ளன என்றும், க.பொ.த. சாதாரண தரத்தில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களும் க.பொ.த உயர்தரத்துக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதில் இந்த திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பான விவரங்களை வழங்குமாறு கல்வி அமைச்சு ஏற்கனவே பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்திருந்தது. அவற்றின் அடிப்படையில் சுமார் 5 ஆசிரியர்கள் மாகாண பாடசாலைக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, ஆசிரியர்கள் அதிகமாக உள்ள பாடசாலைகளில் இருந்து அவர்களை வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு இடமாற்றுவதன் மூலம் ஆசிரியர்களின் வெற்றிடத்தை ஒழுங்குபடுத்தும் திட்டத்தையும் அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

மற்றொரு திட்டத்தின் கீழ், ஆயிரம் ஆசிரியர் உதவியாளர்களை நியமிக்கவும் அரசு எதிர்பார்த்துள்ளது. இந்தத் திட்டத்தில் ஆள்சேர்க்கப்படுவோர், நியமனத்துக்கு முன்பு, ஆசிரியர் மற்றும் கல்வி டிப்ளோமாவை முடிக்க வேண்டும். ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எழுப்பிய பிரச்சினைகள் காரணமாக இந்த திட்டம் தாமதமாகியுள்ளது என்று கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ,ஓ)

## கூட்டமைப்பின்...

யைக் கைப்பற்றுவதற்காகவே அவர்கள் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள் என்பதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த மாவை.சோ.சேனாதிராசா, கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை, பெண் பிரதிநிதிகள் எவரும் இல்லாததால் திருமதி சசிகலா ரவிராஜ்க்கு வழங்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தேர்தலில் தோல்வியடைந்தமையால், கட்சித் தலைமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தார். இதனையடுத்து மாவை.சோ.சேனாதிராசாவை தொலைபேசியூடாக தொடர்புகொண்ட பலரும், நேரில் சந்தித்த பலரும் கட்சியைக் காப்பாற்றுவதற்கு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். இதனை மாவை.சோ.சேனாதிராசவே 'உதயனுக்கும்' தெரிவித்தார்.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் பொருளாளர் பொ.கனகசபாபதி ஆகியோர், மாவை.சோ.சேனாதிராசாவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இதனையடுத்து தேசியப் பட்டியல் ஆசனத்தின் ஊடாக நாடாளுமன்றம் செல்வதற்கு மாவை.சோ.சேனாதிராசா சம்மதம் தெரிவித்துள்ளார். அவரின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் சம்மதத்தையும் சி.வி.கே.சிவஞானம் பெற்றுக் கொண்டுள்ளார்.

திருகோணமலைக்கு நேற்று முன் தினம் மதியம் சென்ற சி.வி.கே.சிவஞானம் மற்றும் பொ.கனகசபாபதி ஆகியோர், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

மாவைக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்க வேண்டுமென்பதை பங்காளிக் கட்சிகள் இரண்டும் ஆதரிக்கின்றன. கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையும் அந்த முடிவில் இருக்கின்றது. கட்சியின் தலைவருக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்குவதே முறையானது என்பதை எடுத்துக் கூறியுள்ளனர். அனைத்தையும் பொறுமையாக கேட்ட சம்பந்தன், 'மாவை சேனாதிராசா தேசியப்பட்டியலில் நாடாளுமன்றம் செல்ல விரும்புகிறாரா?' என்று கேள்வி எழுப்பியுள்ளார். ஆம் என்று பதிலளித்த சீ.வீ.கே.சிவஞானம், அந்த இடத்திலிருந்தே தனது தொலைபேசியில் மாவை.சேனாதிராசாவை தொடர்பு கொண்டு, இரா.சம்பந்தனுடன் பேச வைத்தார். அதன்போது மாவையிடம் தேசியப்பட்டியலை ஏற்றுக்கொள்ள தயாரா என்று சம்பந்தன் வினவினார். மாவை சம்மதமெனப் பதிலளித்தார். இதையடுத்து, அந்த தேசியப்பட்டியலை மாவைக்கு வழங்குவதென இரா.சம்பந்தன் உறுதியளித்தார்.

சி.வி.கே.சிவஞானம் மற்றும் பொ.கனகசபாபதி ஆகியோர் சம்பந்தனை சந்தித்த பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், சம்பந்தனை நேற்றுமுன்தினம் இரவு சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதனையடுத்து கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கம் மட்டக்களப்பிலிருந்து உடனடியாக திருகோணமலைக்கு அழைக்கப்பட்டுள்ளார். கலையரசனை தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பெயரிடுமாறு சம்பந்தன் இதன்போது கட்சியின் செயலர் துரைராஜசிங்கத்துக்கு பணித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதற்கிடையில், நேற்றுக் காலை மாவை.சோ.சேனாதிராசா, கட்சியின் செயலர் துரைராஜசிங்கத்தை தொடர்பு கொண்டு, சம்பந்தன் உறுதியளித்ததையும், பங்காளிக் கட்சிகளின் சம்மதத்தையும் தெரிவித்துள்ளார். தனது பெயரை தேசியப் பட்டியல் உறுப்பினராகப் பிரேரித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்புமாறு கூறியுள்ளார். இதன்போது, கட்சியின் தலைவர் கலையரசனை பெயரிடுமாறு பணித்ததை மாவை.சோ.சேனாதிராசாவுக்கு, துரைராஜசிங்கம் தெரியப்படுத்தவில்லை.

இதேவேளை, கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனத்தை குகதாசனுக்கு வழங்குமாறு எம்.ஏ.சுமந்திரன், மாவை.சோ.சேனாதிராசாவை யாழ்ப்பாணத்தில் வைத்துக் கோரியிருந்தார். அதன் பின்னர் திருகோணமலைக்குச் சென்ற சுமந்திரன், குகதாசனிடம் தேசியப் பட்டியல் ஆசனத்தை ஏற்குமாறு கோரியதாகவும், அதற்கு அவர் மறுத்ததுடன் மாவை.சோ.சேனாதிராசாவுக்கு வழங்குவதே பொருத்தமாக இருக்கும் என்று பதிலளித்தாகவும், நம்பத்தகுந்த தரப்பு ஒன்று தகவல் தெரிவித்தது.

நேற்று மதியம் ஊடக சந்திப்பில், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனம் கலையரசனுக்கு வழங்கப்பட்டுள்ளமையை அறிந்த, தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, கட்சியின் பொதுச் செயலரை தொடர்பு கொண்டு பேசியுள்ளார். தனக்குத் தெரியாமல் இவ்வாறான முடிவு எடுக்கப்பட்டமை தொடர்பில் கடுமையாகச் சாடியுள்ளார். அத்துடன் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும் தொடர்பு கொண்டு காரசாரமாக மாவை.சோ.சேனாதிராசா கடிந்துள்ளார்.

இதனையடுத்து தேசியப் பட்டியல் ஆசன விவகாரத்தை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள் என்று மாவை.சோ.சேனாதிராசாவுக்கு சம்பந்தன் நேற்று இரவு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த விவகாரங்கள் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கத்தை, 'உதயன் பத்திரிகை' பலமுறை தொடர்புகொண்டது. ஒன்றில் அவரது தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அல்லது தொலைபேசி ஒலித்தும் அவர் பதிலளிக்காமல் இருந்தார். பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் மூலம் வீட்டுக்குச் சென்றே அவரது கருத்தை உதயன் பத்திரிகை அறிந்துகொண்டது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை, உதயன் பத்திரிகை நேற்றுமுன் தினம் இரவு தொடர்பு கொண்டது. கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் திருகோணமலைக்கு அழைக்கப்பட்டு சம்பந்தனுடன் சந்திப்பு நடத்தினார் என்பதை உறுதியாக அறிந்து கொண்ட பின்னர் தொடர்பு கொண்டு தேசியப் பட்டியல் விவகாரம் தொடர்பில் கேட்டபோது, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் பேசியே முடிவு செய்யப்படும் என்று பதிலளித்திருந்தார்.

கலையரசனுக்கு தேசியப் பட்டியல் வழங்கப்படுவதாக செய்திகள் வெளியான பின்னர் நேற்றுக் காலை தொடர்பு கொண்ட கேட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறை ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்தது. அதை கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளருமான தவராசா கலையரசனுக்கு வழங்கியுள்ளோம். இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராஜசிங்கம், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார். அம்பாறை மாவட்டம் இம்முறை தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்துள்ளது. அதனாலேயே அந்த மாவட்டத்துக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்க முடிவெடுத்தோம், என்று பதிலளித்தார்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான மாவை.சோ.சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம்அடைக்கலநாதன் ஆகியோர் தம்முடன் கலந்துரையாடாமல், இந்த ஆசனம் தன்னிச்சையாக சம்பந்தரால் வழங்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை நேற்று மாலை முன்வைத்தனர். அது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் கேட்டபோது, இதைப் பற்றி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராஜசிங்கத்திடம் கேட்கவும், என்று மட்டும் குறிப்பிட்டார்.

(ஓ,5,22)

## சம்பந்தனின்...

நாடாளுமன்றத் தேர்தலில் பின்னடைவைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் மாத்திரமே கிடைத்தது. அந்த ஆசனத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் கடந்த இரண்டு நாள்களாகப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ ஆகியவற்றுடன் கலந்துரையாடியே முடிவு எடுக்கப்படும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திரும்பத் திரும்ப தெரிவித்து வுந்தார். ஆனால் திடீரென, நேற்றுக் காலை அம்பாறையைச் சேர்ந்த கலையரசனுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராஜசிங்கம் ஆகியோரைத் தொடர்பு கொண்டு கடுமையாக் கடிந்துள்ளார். தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான தன்னுடனோ ஏனைய பங்காளிக் கட்சித் தலைவர்களுடனேயோ கலந்துரையாடாமல் முடிவு எடுத்தமை தொடர்பில் சாடியுள்ளார்.

இதேவேளை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இந்த நிலைப்பாடு தொடர்பில் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் நேற்று மாலை நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் தனது கண்டனத்தைப் பதிவு செய்தார்.

'தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவைக்கு கூடத் தெரியாமல் கட்சியின் செயலர் ஒருவருடைய பெயரை பரிந்துரைத்துள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். இவர்கள் இப்படி நடந்து கொண்டமை மிகவும் தவறான செயற்பாடாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளும் மிகவும் கஷ;டப்பட்டு பெற்றுக்கொண்ட தேசியப் பட்டியல் ஆசனத்தை ஒரு கட்சி தனக்கு மட்டும் உரியது என்று உரிமை கொண்டாடுவது மிகவும் கவலையான விடயமும் தவறான செயற்பாடுமாகும். இவ்வாறான தவறுகள் நடக்குமாக இருந்தால் நாம் மிகப் பெரிய நடவடிக்கையை எடுப்போம். உரிய எதிர்வினையை நாம் நிச்சயம் காண்பிப்போம்' என்றார்.

மற்றொரு பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்ததாவது, தேசியப் பட்டியல் விவகாரத்தில் சம்பந்தன் ஜனநாயகமாக நடக்கவில்லை. பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து முடிவு எடுத்திருக்கலாம். அம்பாறைக்கு வழங்கப்படவேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அதனை நடைமுறைப்படுத்திய விதம் முற்றிலும் தவறானது' என்றார். (ஓ,5)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



Dr.தெய்வாம்பிகை சண்முகரட்ணம்

(ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பழை)

அன்னை மடியில்
29.12.1977

சந்நிதியான் அடியில்
23.07.2019

திதி: அபரபட்ச சப்தமி

இல்லத்தின் இனிய அரசியாய் விளங்கினாய்
இலட்சியத்தின் முடிவுகாண இரவுபகலாய் உழைத்தாய்
குடும்பத்தின் குலவிளக்காய் குத்துவிளக்கானாய்
குழந்தை குட்டிகளுடன் குதூகலமாக மகிழ்ந்தாய்
கைபிடித்த கணவனுக்கு உற்ற பத்தினியானாய்
ஆனால் வாழ்ந்த வாழ்க்கை போதும் - இனிப்
பரமனுக்கு பாதபூசை செய்ய எனப் புறப்பட்டாய்
உங்கள் இலட்சியம் நிறைவேற இறைவனை வேண்டி நிற்கும்

கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மாமா, மாமி
கணவர், பிள்ளைகள்.
குருபரன் (மகன்), லாவண்யா (மகள்)

மரண அறிவித்தல்



ஐயம்பிள்ளை இராமநாதன்

காரைநகரைப் பிறப்பிடமாகவும். மானிப்பாய் கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை இராமநாதன் நேற்று (09.08.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் சரவணை - செல்வி தம்பதிகளின் மருமகனும். அரிய மலரின் அன்புக் கணவரும். வாசன் (லண்டன்). வாசுகி (ஆசிரியை- யாழ் / நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை). வனஜா (ஆசிரியை- யாழ் மண்டைதீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும். சயானி (லண்டன்). ஜெயக்குமார் (மொழிபெயர்ப்பாளர்- தெல்லிப்பளை பிரதேச செயலகம்). ரஞ்சித் (ரஞ்சித் மோட்டோர்ஸ்-மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பபிஷன், நவீனயா. சபிஷ். ரோகித் ஆகியோரின் அன்பு பேரனும் புஷ்பவதி. பத்மினி. லலிதா ஆகியோரின் மைத்துனரும். காலஞ்சென்ற முத்துலிங்கம். சரவணமுத்து பன்னிருகரம் ஆகியோரின் சகலனும். எழிலாசினி. ரமணன். ரஞ்சித். பாமிதன். பார்த்தீபன். பபிதா. காயத்ரி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (10-08-2020) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணி அளவில் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார். உறவினர். நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

077 670 5107 தகவல்:- குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

நாகநாதி சுந்தரலிங்கம்



யாழ். நெடுந்தீவை பிறப்பிடமாகவும். 204. ஆறுமுகம் வீதி. வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற கால்நடை அலுவலர் - கிளிநொச்சி) நேற்று (09.08. 2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி - தங்கம்மா தம்பதிகளின் மூத்த மகனும் கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், பவானி, துஷ்யந்தன் (சாரதி கால்நடை வைத்தியர் அலுவலகம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும். தங்கேஸ்வரன் (இந்திரன்). ராஜினி (உப அதிபர், கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், பர்வஜன், தர்மிஜன் (கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி). கிதுர்ஜன் (கிளி/ இந்து ஆரம்ப பாடசாலை). பவிஷன் (கிளி/ இராமநாதபுரம் அ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும். நாகேஸ்வரி (மலர்). சீதாலட்சுமி. தியாகராசா. நவரத்தினராசா. காலஞ்சென்ற தங்கலட்சுமி. நகுலேஸ்வரன் (முகாமைத்துவ உதவியாளர் வடமாகாண நீர்ப்பாசன திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்ற கனகரத்தினம். நாகலிங்கம் (சாவகச்சேரி). பொன்னுத்துரை (கனடா). கமலமலர் (மிருசுவில்). காலஞ்சென்ற சோமசுந்தரம். முருகேசு ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (10-08-2020) திங்கட்கிழமை பி.ப 3.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

## சுமந்திரனாலேயே..

டது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளைக் கூட்டத்தில் பலராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளைக் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் 43 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்று வாக்கு எண்ணும் பணி இடம்பெற்ற போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பில் கடும் வாதப் பிரதிவாதங்கள் கூட்டத்தின் போது இடம்பெற்றன. ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

குறிப்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உடுப்பிட்டித் தொகுதியில் மிகப் பெரிய பின்னடைவைச் சந்தித்தமை தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொகுதிக் கிளைத் தலைவர் மற்றும் வடமராட்சிக்குப் பொறுப்பாக செயற்பட்ட சுமந்திரன் ஆகியோர் மீது முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களாலும், பிரதேச சபை உறுப்பினர்களாலும் குற்றச்சாட்டக்கள் சுமத்தப்பட்டன.

கட்சித் தலைமை தொடர்பில் சி.சிறீதரன் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கள் பொருத்தமற்றவை என்று மாவட்டக் கிளை உறுப்பினர்களான விரிவுரையாளர்களாலும், பேராசிரியர்களாலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களாலேயே கூட்டமைப்புக்கு பின்னடைவு ஏற்பட்டது என்று பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் குற்றம் சுமத்தினார். அவருக்கு ஆதரவாக மாவட்டக் கிளையில் பலரும் கருத்துக்களைத் தெரிவித்தனர். (ஒ,5)

14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜோசப் பற்றிக் (ராசா)

மறைவு : 10.08.2006

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
பதின்னான்கு வருடமாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய் விழுது இழந்து தவிக்கின்றோம்.
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

149/2, கதித்தல் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஊர்காவற்றுறை. பருத்தித்துறை)

மலர்வு
14.03.1947

உதிர்வு
10.08.2007

அன்புமொழி பேசி எமையணைத்தவரே அப்பா!
இத்தரணியிலே எமையெல்லாம் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றீர்கள்?
எங்கள் உணர்வலைகள் எப்போதும் அப்பா என்று
உங்களையே அழைக்குதப்பா!
உங்கள் ஆத்ம சாந்திக்காய் அவனியதில்
ஆண்டவனை அனுதினமும் வேண்டுகின்றோம்.

"தணிகை"
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

ஈரவிழிகளுடன்
உங்கள் நினைவுகளை சுமந்தபடி
குடும்பத்தினர்

## தம்பி...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், இராஜதந்திரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

சுபநேரம்வரும்வரை காத்திருந்து ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுக்கொண்டார் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ச. அதன்பின்னர் தனது அண்ணானான மஹிந்தவின் பாதங்களில் விழுந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆசிபெற்றார்.

பதவியேற்பு நிகழ்வு முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியுடன் விகாரைக்கு சென்று பிரதமர் வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் விகாரை வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் நன்றி தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியென அனைத்து பதவிகளையும் வகித்த ஒரேயொரு அரசியல்வாதியாக மஹிந்த ராஜபக்ச கருதப்படுகின்றார் (எ,ஓ,44)

இதய அஞ்சலி

எமது வெஸ்கோ சுப்பமாட் முகாமையாளர்
N. பாஸ்கரன் அவர்களின் அன்புத்
துணைவி
திருமதி மாலினி பாஸ்கரன்
(மாவட்ட கிராம அபிவிருத்தி
உத்தியோகத்தர் - முல்லைத்தீவு)
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி
கேட்டு மிகவும் கலக்கமுறுகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின்
துணைவர் மற்றும் உற்றார்.
உறவினர்க்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வ
துடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டிநிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



WESCO SUPER MART
லயன் க.மு. பரமநாதன் குடும்பத்தினர் மற்றும் சகபணியாளர்கள்.





# மீண்டும் டோனி!

**ராஞ்சி, ஓக. 10**

**இந்திய அணியின் முன்னாள் தலைவரும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவருமான டோனி நீண்ட இடைவெளியின் பின்னர் நேற்றுமுன்தினமும் நேற்றும் தொடர்ந்து வலைப்பயிற்சியில் ஈடுபட்டார். சுமார் 3 மணிநேர பயிற்சியில் அவர் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

மார்ச் மாதம் நடைபெறவிருந்த ஐ.பி.எல் தொடர் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டது. அந்தத் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடருக்காக அடுத்த வாரம் ஐ.பி.எல் தொடரில் பங்குபற்றும் 8 அணிகளும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் முகாமிடவுள்ளன. தற்போது வீரர்கள் தத்தம் வீடுகளில் பயிற்சிகளை மேற்கொண்டு தமது பயிற்சி தொடர்பான ஒளிப்படங்களையும் காணொளிகளையும் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு வருகின்றனர். சென்னை சுப்பர் கிங்ஸின் தலைவரான டோனியும் மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார்.

ராஞ்சி மாநிலத்தின் உள்ளூர் வீரர்களுடன் நேற்றுமுன்தினமும் நேற்றும் டோனி பயிற்சியில் ஈடுபட்டார். சுமார் 3 மணிநேரம் அதிரடியாக அவர் விளையாடினார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவில் அடுத்த வருடம் நடைபெறும் ரி20 உலகக்கிண்ணத்தில் இடம்பிடிக்க வேண்டுமாயின் வரவுள்ள ஐ.பி.எல் தொடரில் டோனி தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாய நிலை இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி-2)

# மகளிர் உலகக் கிண்ணமே மிதாலிராஜ்ஜின் இலக்காம்

புதுடில்லி, ஓக.10

மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஓராண்டு காலம் ஒத்திவைக்கப்பட்டாலும், அந்தப் போட்டியில் விளையாட வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கிறேன் என்று இந்திய அணியின் கப்டன் மிதாலிராஜ் தெரிவித்துள்ளார்.

12 ஆவது மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) அடுத்த ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி முதல் மார்ச் 7 ஆம் திகதி வரை நியூசிலாந்தில் நடைபெறவிருந்தது. இந்தப் போட்டிக்கு நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்ஆபிரிக்கா, இந்தியா ஆகிய 5 நாடுகளின் அணிகள் தகுதி பெற்றிருந்தன. எஞ்சிய 3 இடத்துக்கான தகுதி சுற்றுப் போட்டி இலங்கையில் நடைபெறவிருந்த நிலையில் கொரோனா அச்சத்தால் அந்தத் தகுதிச் சுற்று ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில் மகளிர் உலகக் கிண்ணப் போட்டியை 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை ஒத்திவைப்பதாக ஐ.சி.சி. நேற்று முன்தினம் அறிவித்தது. இதைச் சுட்டிக்காட்டி ஆஸ்திரேலிய முன்னாள் வீராங்கனையும், வர்ணனையாளருமான லிசா தனது டுவிட்டர் பதிவில், 'அடுத்த ஆண்டு நடக்க இருந்த உலகக் கிண்ணப் போட்டிக்கு பிறகு ஓய்வு பெறலாம் என்று திட்டமிட்டு இருந்த மிதாலிராஜ், ஜூலன் கோஸ்வாமி, ரேச்சல் ஹெய்ன்ஸ் போன்ற வீராங்கனைகள் இன்னும் ஒரு வருடம் காத்திருக்க வேண்டும்'என்று கருத்துத் தெரிவித்திருந்தார். இதற்கு இந்திய ஒரு நாள் போட்டி அணியின் கப்டன் மிதாலி ராஜ் அவரது டுவிட்டர் பதிவில் தெரிவித்ததாவது;

'நிச்சயமாக உலகக் கிண்ணம் மீது எனது பார்வையை பதித்து இருக்கிறேன். முன்னரை விட உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் புத்துணர்ச்சியுடனும், வலுவாகவும் இருக்கிறேன். 2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடி கிண்ணத்தை வெல்வதே எனது குறிக்கோள் எனக் குறிப்பிட்டுள்ளார். (ரி2)

# சில்வாவுக்கு புதிய பதவி

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் இலக்குக் காப்பாளர் லங்கா டி சில்வா, இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் இடைக்கால தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஹர்ஷா டி சில்வா மோசமான செயல்திறன் காரணமாக தலைமைப் பயிற்சியாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையிலேயே, இவர் இவ்வாறு தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்ப ட்டுள்ளார். இலங்கை கிரிக்கெட் அணிக்காக மூன்று டெஸ்ட் மற்றும் 11 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள லங்கா டி சில்வா, 2020 ஆம் ஆண்டின் இறுதிவரை இந்தப் பதவியில் இருப்பார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கேள்விக் கோரிக்கை**

யாழ். கச்சேரிக்கு அருகில் YMCA கட்டடத்தில் 30'x10' அளவுள்ள கடை 01.09.2020 வாடகைக்கு கொடுப்பதற்கு கேள்விக் கோரிக்கைகள் கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு: 077 476 6300

முடிவுதிகதி: 20.08.2020

பொதுச் செயலாளர்.

## பச்சைப் பொய்...

பொய். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

'வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மக்களின் இருப்பை நிலை நிறுத்துவதற்காக தமிழ் அரசுக் கட்சியின் தலைவரின் ஒப்புதலோடு அம்பாறை மாவட்டத்துக்கு தேசியல் பட்டியல் ஆசனம் வழங்கியுள்ளதாக தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்' என்று நேற்று மாலை ஊடகமொன்றில் செய்தி வெளியாகியிருந்தது. இது தொடர்பில் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிர்ாசாவை தொடர்புக்கொண்டு கேட்டபோதே, "இது பச்சைப் பொய். என்னுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்படவே இல்லை" என்று பதிலளித்தார். (ஒ,5)

## தேசியப் பட்டியலில்...

என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கட்சியின் செயலர், தேசியப் பட்டியலுக்கான பெயரை பிரேரித்து அனுப்பியதும் அந்தப் பெயரை வர்த்தமானியில் வெளியிடுவதற்குரிய ஒழுங்குகளை தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாக மேற்கொள்ளும்.

இருப்பினும் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியில் தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் இதுவரை கையொப்பமிடவில்லை. பெரும்பாலும் இன்றைய தினமே அவர்கள் கையெழுத்திடவுள்ளனர்.

வர்த்தமானியில் கையெழுத்திடுவதற்கு முன்னதாக பிரேரித்த பெயரில் மாற்றங்களைச் செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ,5)

## மாவைக்கே...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை, ஏனைய பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவுக்கே வழங்கவேண்டும் என்று கட்சிக் கிளை ஏகமனதாகத் தீர்மானித்தது.

இந்தத் தீர்மானம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு உடனடியாகவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## மரண அறிவித்தல்

### திருமதி மாலினி பாஸ்கரன்

(மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் - முல்லைத்தீவு)



பிறப்பு 04.01.1967 இறப்பு 09.08.2020

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இல.50, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாலினி பாஸ்கரன் நேற்று (09.08.2020) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வு பெற்ற அதிபர்) - சோமவதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், இராஜலிங்கம் ஆகியோரின் பாசமிகு மருமகளும், வேதவதியின் அன்புப் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - கனகமணி (இணுவில் மேற்கு), தம்பதியரின் அன்பு மருமகளும், பாஸ்கரன் (Wesco pharmacy) அவர்களின் பாசமிகு துணைவியாரும், சாலினி, தேவன் இளங்கோ (London), கௌரி (வசந்தா), திருமகள் (மீரா), காலஞ்சென்ற சூலபாணி மற்றும் மன்றுளாடி (வவுனியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற லிகிதர்), கிருஷ்ணவேணி, கலைவாணி (ஆசிரியை - வ/ மூன்று முறிப்பு அ.த.க.பா), பத்மராணி (ஆசிரியை - யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (கணக்காளர்) மற்றும் யோகலட்சுமி (London), காலஞ்சென்ற சச்சிதானந்தன், தேவிகா (ஆசிரியை - வ/ தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), ராஜினி (ஆசிரியை - வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், விசாகியின் பாசமிகு சித்தியும், விஷ்ணுவர்த்தனனின் (Commercial Leasing & Finance - வவுனியா), மாமியும், சாரங்கன், சயந்தினி, அபிரிகா, அபிஷகன், மயுரிகா, லக்ஷிகன் ஆகியோரின் பாசமிகு அத்தையும், கோவேழன், கௌரீசன், ஏரகன், தரசுதா, ஜனரஞ்சனி, திருவேணி, அபிவர்ஷினி ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2020) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.50, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்**

**021 221 9011, 075 046 8921**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.